பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 06 வெள்ளிக்கிழமை (18-02-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:72

# படையினரின் ஹெலி வீழ்ந்து நொருங்கியது!

## எழுதுமட்டுவாளுக்கு அருகில் நேற்று இரவு சம்பவம்

கொழும்பு,பெப்ரவரி 18

**படையினரின் ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்று இரவு 7.20 மணி அளவில் எழுது மட்டுவாள் பகுதியில் வீழ்ந்து நொருங்கி யது. இந்தச் சம்பவத்தின் போது ஹெலிக் கொப்டரின் விமானி தப்பிவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.**

ஹெலி வீழ்ந்து நொருங்கியதை இராணுவ வட்டாரங்க ளும் நேற்று இரவு ஊர்ஜிதம் செய்தன.

ஆனால் ஹெலி வீழ்ந்ததுக்கான காரணம் எதுவும் நேற்றிரவு தெரியவரவில்லை.

கட்டுப்பாடு இழந்த நிலையில் விமானி ஹெலியை இறக்கிய சமயம் இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஹெலி கட்டுப்பாட்டை இழந்து விழுந்ததற்கு புலிக ளின் தாக்குதல் காரணமா அல்லது இயந்திரக் கோளாறு காரணமா என்பது இன்று காலை தெரியவரலாம் என்று கூறப்பட்டது. வீழ்ந்து நொருங்கிய ஹெலி பெல் ரேஞ் ரக ஹெலி என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# உமையாள்புரத்தில் 23 புலிகள் உயிரிழப்பு

வவுனியா,பெப்.18

உமையாள்புரம் பகுதிகளில் நேற்று முன்தினம் அதி காலை இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் தமது தரப்பில் 23 பேர் உயிரிழந்தனர் என்று விடுதலைப் புலி கள் அறிவித்துள்ளனர்.

உமையாள்புரம் பகுதியில் 700மீற்றர் நீளமான பாது காப்பு வேலிகளைத் தாம் முற்றாகத் தாக்கி அழித்து விட்டதாகவும் -

இந்தச் சம்பவத்திலேயே புலிகள் தரப்பில் 23பேர் உயிரிழந்ததாகவும் "புலிகளின் குரல்" நேற்றிரவு தெரிவித்தது. (இ-7)

# தென்மராட்சியில் பலத்த ஷெல் வீச்சு!

## நால்வர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம்,பெப்.18

தென்மராட்சியின் உசன், மிருசுவில் மற்றும் கொடி காமம் பகுதிகளில் நேற்றிரவு முதல் தொடர்ச்சியாக ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகச் செய்திகள் தெரிவித் தன.

உசன், மிருசுவில் பகுதிகளில் நேற்றிரவு 7.30 மணி யளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் ஒரே குடும்பத்

(12ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைக்கு 3 தினங்களில் நடவடிக்கை எடுங்கள்!

## சிப்பாய்கள் கோரிக்கை

வவுனியா,பெப்.18

வன்னியில் புலிகளின் தடுப்புக் காவலில் சாகும்வரை உண்ணாவிர தம் மேற்கொண்டு வரும் சிப்பாய்கள் மூன்று தினங்களுக்குள் தமது விடு தலை தொடர்பாக உரிய நடவ டிக்கை எடுக்க வேண்டுமென அர சாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள் ளனர்.

உண்ணாவிரதம் அனுஷ்டித்து வரும் போர்க்கைதிகளில் ஒருவரான "சாகரவர்த்தனா" கப்பல் கப்டன் அஜித்குமார போயாகொட "புலிக ளின் குரல்" வானொலிக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித் தார்.

எமது விடுதலை தொடர்பாக அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்காதுவிட்டால் உண் ணாவிரதம் இருந்து சாவதைத் தவிர எமக்கு வேறு வழி இல்லை.

உறவினர்கள் வன்னிக்கு வந்து எம்மைச் சந்திப்பதற்கு ஒழுங்குகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை இனநெருக்கடித்தீர்வுக்கான பணிகளுக்கு நீண்டகாலம் செல்லும்

## நோர்வே வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

ஒஸ்லோ,பெப்.18

இலங்கையில் நிலவும் இன நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணும் பணிகளுக்கு நீண்டகாலம் எடுக்கும் என்று இலங்கை வந்து திரும்பிய நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட் வொலேபெக் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினையில் அரசியல் தீர்வு ஒன்றை அடைவதில் இரு தரப்பினரும் காட்டும் ஆர்வம் தமக்கு உற்சாகத்தை அளிப்பதாக வும் உரிய தரப்புக்களின் ஆர்வமும் அர்ப்பணிப்பும் அரசியல் நீதியான ஈடுபாடுமே தீர்வுக்கு அவசியமான தேவைகள் என்றும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்க, எதிர்க்கட்சித்

(12ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப மத்திய கிழக்குத் தீர்வு மாதிரி வருடக்கணக் கில் செல்லும் போல...

# எலும்புகளுடன் மீட்கப்பட்ட பொருள்கள் பார்வைக்கு!

யாழ்ப்பாணம்,பெப்.18

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் செம்மணிப் புதைகுழிப் பகுதி யில் இடம்பெற்ற தோண்டும் பணி யின் போது மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளுடன் காணப்பட்ட உடுதுணி கள் மற்றும் மனித பாவனைப் பொருள்கள் போன்றவை எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 5 நாள்களுக்கு யாழ்.மத்திய கல்லூரியில் பார் வைக்கு வைக்கப்பட உள்ளன.

இந்தப் பொருள்களை அடையா ளம் காட்டுவதற்காக காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர் கள் மற்றும் காணாமல் போனோர் குறித்து முறைப்பாடு செய்தோர் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை யாழ். மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கேட் டுள்ளனர்.

(இ-5)

# இந்துப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.18

இந்துக்களின் புனித நாளான மகா சிவராத்திரி தினமான எதிர் வரும் 4ஆம் திகதி யுத்த நிறுத்தம் செய்யுமாறு யாழ்ப்பாணம் இந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

# ராஸிக் குழு உறுப்பினர்கள் இருவர் கிரனேட் வீச்சில் பலி!

## மட்டக்களப்புப் பகுதியில் சம்பவம்

மட்டக்களப்பு,பெப்.18

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு வேறு கிரனேட் வீச்சுச் சம்பவங்க ளில் இராணுவ தேசியதுணைப் படையான ராஸிக்குழு உறுப்பினர் கள் இருவர் உயிரிழந்தனர். உயிரி ழந்த ஒருவரின் உறவினர்கள் 6 பேர் காயமடைந்தனர்.

வாழைச்சேனை - சுங்காங் கேணியில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம் பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் விடுமுறையில் சென்றிருந்த எஸ்.சந் திரன் (வயது 34) என்பவர் உயிரி ழந்தார்.

மதுபோதையில் சுங்காங்கேணிப் பகுதியில் இவர் நடமாடிய போதே இனந் தெரியாத நபர்கள் இவர்மீது கிரனேட் வீசிவிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு - மண்டூரில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற மற்றோர் சம்பவத்தில் செல்லத்துரை இராஜேந்திரன்

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஏழாலையில் கிரனேட் வீச்சு

ஏழாலை மயிலங்காடு பகுதியில் நேற்றுக்காலை ரோந்து சென்ற படையினர் மீது கிரனேட் வீசப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் போது ஒரு படையினர் காயமடைந்தார் என்றும் -

சம்பவத்தை அடுத்து படையினர் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுத லின் போது பத்து இளைஞர்கள் விசாரணைக்காக ஊரெழு முகா முக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் -

அவர்களில் அறுவர் பின்னர் விடு விக்கப்பட்டுவிட்டனர் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து சிலர் தாக்குதலுக்கு உள்ளானதா கவும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-133-180-27)

# மட்டக்களப்பிலிருந்து 20 கைதிகள் நேற்று களுத்துறைக்கு மாற்றம்!

பயங்கரவாதத் தடைச்சட்டத் தின் கீழ் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 53 தமிழ் அரசியல் கைதிகளில் 20 பேர் நேற்று வியாழக்கிழமை களுத்து றைச் சிறைச்சாலைக்கு இடம்மாற் றப்பட்டனர் என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.

மட்டக்களப்பில் இருந்து நேற் றுக் காலை பொலநறுவை நோக்கிச் சென்ற இராணுவ வாகனத் தொடர ணியின் போது இந்தக் கைதிகளும் பலத்த பாதுகாப்புடன் பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கைதிகள் தென் இலங் கைச் சிறைச்சாலைக்குத் தம்மை இடம்மாற்றம் செய்ய வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்திருந்தனர் எனவும் -

எனினும் பாதுகாப்பு அமைச்சின் விசேட பணிப்பின் பேரில் இந்தக் கைதிகள் களுத்துறைச் சிறைச்சா லைக்கு நேற்று அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர் எனவும் - செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் பயங்கர வாதத்தடைச் சட்டத்தின் கீழ் வழக் குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள 12 தமிழ் அரசியல் கைதிகள் நேற்று மாலை களுத்துறைச் சிறைச்சா லையில் இருந்து பலத்த பாதுகாப் புடன் மட்டக்களப்பு சிறைச்சா லைக்கு அழைத்து வரப்பட்டனர்.

# யாழ்.மேயர் பதவியை ஏற்க கந்தையன் முயற்சி?

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.மாநகரசபை மேயர் பத வியை ஏற்க மறுத்துக் கடிதம் அனுப்பிய தமிழர் விடுதலைக்கூட் டணி உறுப்பினர் செல்லன் கந்தை யன் தமது மறுப்புக் கடிதத்தை வாபஸ் பெற்று, மேயர் பதவியை ஏற்பதற்கு தற்போது ஆலோசித்து வருவதாகத் தெரியவருகின்றது.

தமிழர் விடுதலைக்கூட்டணி யைச் சேர்ந்த யாழ். மேயர் பொன் சிவபாலன் படுகொலை செய்யப்பட் டதை அடுத்து ஏற்பட்டுள்ள வெற்றி

(12ஆம் பக்கம் பார்க்க)

# DCSஇன்

## புலமைப்பரிசில் திட்டம் 2000/2001

மேற்படி புலமைப்பரிசில் பரிட்சையில் தகுதி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் 19.02.2000 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. தகுதி பெற்ற மாணவர்களுக்கான அழைப்பிதழ்களை எமது கீழ்வரும் கிளை அலுவலகங்களில் பெற்றுத் தங்கள் வரவினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

வடமராட்சி மாணவர்களுக்கு விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பு:- மேற்படி புலமைப்பரிசில் பரிட்சையில் தகுதி பெற்ற மாணவர்களுக்கான கற்கை நெறிகள் 04.03.2000இல் ஆரம்பமாகவுள்ளதால் பதிவுகளை 22.02.2000க்கு முன்னர் மேற்கொள்ளவும். A/L 2000 மாணவர்களும் மேற்படி பதிவுகளை குறித்த திகதியினுள் மேற்கொண்டு தங்கள் கற்கை நெறிகளை A/L பரீட்சை முடிவடைந்த பின்னர் ஆரம்பமாகும் புதிய பிரிவில் தொடரலாம்.

குறிப்பு:- நேற்றைய உதயனில் வெளியாகிய, பதிவுகளை 22-03-2000ற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டும் என்பது தவறாகும். 22-02-2000 என்பது சரியாகும்.

*Director*
DCS

124/2, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

M.M.V. வீதி,
நெல்லியடி.

(73791)

**ராஜா**
யாழ்ப்பாணம்
அநேக ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
சில தினங்கள் மட்டும்
கார்த்திக்,
பானுப்பிரியா
நடித்த
**கோபுர வாசலிலே**
காட்சிகள் 10.30, 2.30
(C/11044)

**லிபேட்டி**
அச்சுவேலி
பிரபுதேவா, கவலட்சுமி
நடித்த
**ஏழையின் சிரிப்பில்**
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P – 070 – 212223
070 – 212678
(73658)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
விஜய், மந்த்ரா,
ரகுவரன்
நடித்த
**லவ் டுடே**
(ரீலீஸ்)
காட்சிகள் 11.00, 2.00
(புதிய நேரம்)
(C/11068)

# விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிஇடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 17ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சாவகச்சேரி

(129933ஏ), (129933பி), (129933சி) (129960ஏ), (131298ஏ), (131298பி), (131298சி), (131298டி), (131181ஏ), (131415ஏ), (126078ஏ), (126078பி), (130511ஏ), (130542ஏ), (130547ஏ), (130547பி), (130547சி), (130547டி), (131463ஏ), (131506ஏ), (131519ஏ), (131519பி), (131519சி), (131519டி), (131520ஏ), (131520பி), (134921ஏ), (134931ஏ), (134941ஏ).

### யாழ்ப்பாணம்

(1195ஏ), (1195பி), (120532ஏ), (130373ஏ), (130408ஏ), (130408பி), (130408சி), (130443ஏ), (131933ஏ), (131933பி), (1320106ஏ), (132047ஏ), (132047பி), (132047சி), (132048ஏ), (132080ஏ), (132087ஏ), (132091ஏ), (132091பி), (132124ஏ), (132126ஏ), (132126பி), (132126சி), (132126டி), (132126ஈ), (132170ஏ), (132176ஏ), (132182ஏ), (132183ஏ), (132198ஏ), (132202ஏ), (132208ஏ), (132210ஏ), (132221ஏ), (132221பி), (132226ஏ), (132226பி), (132235ஏ), (132236ஏ), (132250ஏ), (132250பி), (132251ஏ), (132258ஏ), (132264ஏ), (132266ஏ), (132274ஏ), (132274பி), (132274சி), (132283ஏ), (132283பி), (132302ஏ), (132302பி), (132302சி), (132316ஏ), (132316பி), (132338ஏ), (132341ஏ), (132351பி), (132354ஏ), (132354பி), (132356ஏ), (132386ஏ), (132388ஏ), (132390ஏ), (132392ஏ), (133476ஏ), (133476பி), (133476சி), (133476டி), (133662ஏ), (133662பி), (133662சி), (133662டி), (136892ஏ), (136907ஏ), (136909ஏ), (136909பி), (136911ஏ), (136915ஏ), (136915பி), (136915சி), (136933ஏ), (136943ஏ), (136963ஏ), (136963பி), (136963சி), (136963டி), (136963ஈ), (136966ஏ), (136966பி), (136966சி), (136966டி), (136966ஈ), (136966எவ்), (136968ஏ), (136993ஏ), (137027ஏ), (137035ஏ), (137044ஏ).

### கரவெட்டி

(125668ஏ), (125668பி), (125668சி), (129533ஏ), (129590ஏ), (129590பி), (129590சி), (130832ஏ), (130850ஏ), (130850பி), (131059ஏ), (131091ஏ), (131119ஏ), (131119பி), (131119சி), (131119டி), (131165ஏ), (131198ஏ), (131204ஏ), (132476ஏ), (132476பி), (132489ஏ), (132489பி), (132489சி), (132489டி), (135016ஏ), (135030ஏ), (135030பி), (135030சி), (135030டி), (135178ஏ), (135187ஏ).

### மருதங்கேணி

(131012ஏ)

### நல்லூர்

(132351ஏ), (136897ஏ), (136897பி), (137005ஏ).

### பருத்தித்துறை

(125591ஏ),(125591பி), (127563ஏ), (127563பி), (127836ஏ), (130966ஏ), (130966பி), (130966சி), (130966டி), (130979ஏ), (130979பி), (131151ஏ), (131151பி), (131163ஏ), (131163பி), (131163சி), (131164ஏ), (132471ஏ), (132474ஏ), (132474பி), (132477ஏ), (132497ஏ), (132810ஏ), (135003ஏ), (135008ஏ), (135008பி), (135027ஏ), (135037ஏ), (135131ஏ).

இலங்கையின் தரக்கட்டுப்பாட்டு முத்திரையுடன்
விற்பனையாகின்றது 'சீமன்ஸ் தயாரிப்புக்கள்'.

## இலங்கை மக்களின் செழிப்பான கூந்தல்களுக்கு உத்தரவாதமளிப்பது

TOTAL SRILANKAN HAIR CARE

**சீமன்ஸ் கிங் கோகோநட் ஒயில்**

**SEIMENS "KING" COCONUT OIL**

(நறுமணம் ஊட்டிய செவ்விளம் தேங்காய் எண்ணெய்)

குடாநாட்டில் போலியாக பெட்டிகளை அச்சிட்டு போலி எண்ணெய்கள் விற்பனையாவதால் தரச்சின்னத்தை உறுதிப்படுத்தி கொள்முதல் செய்யுமாறு வேண்டுகிறோம்.

தயாரிப்பாளர்கள் SEIMENS BROTHERS, UG 5 PEOPLE'S PARK COMPLEX COLOMBO - 11. FAX: 941-437369

குடாநாட்டுக்கான ஏகவிநியோகஸ்தர்: சீவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P - 2567

(73766)

## யாழ்ப்பாணத்திலிருந்து யாழ்ப்பாணப் பொருள்களை கொழும்புக்கு குமண கப்பலில் அனுப்புவோரது கவனத்துக்கு!

பெப்ரவரி மாத இறுதிக் கிழமை அளவில் யாழ்ப்பாணத்திலிருந்து குமண கப்பல் கொழும்புக்குச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கப்பலில் பொருள்களைக் கொண்டுசெல்ல விரும்புபவர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

- இங்கிருந்து அனுப்பும் பொருள்களின் பெயர், அதன் அளவு போன்ற விவரங்களையும், அத்துடன் பொருள்களை பொறுப்பேற்க அமர்த்தியுள்ள முகவரின் விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.
- உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட மரக்கறிவகைகள், வெங்காயம் போன்ற பழுதடையக் கூடிய பொருள்களுக்கு ஒரு CBM/MTஇற்கு ரூபா 575 ஐ கொழும்பு, பருத்தித்துறை துறைமுகங்களில் ஏற்றி இறக்கற் கையாளற் கட்டணமாக செலுத்தவேண்டும்.
- பழுதடையாத உற்பத்திப் பொருள்களுக்கு ஒரு CBM/MT இற்கு ரூபா 2,000ஐ கொழும்பு, பருத்தித்துறை துறைமுகங்களில் கப்பல் கட்டணம், ஏற்றி இறக்கற் கையாளற் கட்டணமாக செலுத்தவேண்டும்.
- கட்டணங்கள் யாவும் யாழ்.செயலக புனர்வாழ்வுக் கிளையிலேயே முற்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும். பணம் செலுத்தினால் மாத்திரமே பருத்தித்துறையில் பொருள்களை ஏற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

எனவே பொருள்களை ஏற்ற விரும்புபவர்கள் பொருள்களின் விவரம் மற்றும் சரியான அளவையும் குறிப்பிட்டு யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்

(C/11053)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி வலயத்தின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.த.அருணகிரிராஜா அவர்களின் தந்தையார்

**திரு.வடிவேல் தங்கராஜா**

அவர்களின் மறைவால்துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாருக்கு எமது அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பழைய மாணவர் சங்கத்தினர்.

யா/புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம்,
ரக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(C/11072)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
01
-
06
-
1949



உதிர்வு
01
-
03
-
1999

**அமரர் இராமகிருஸ்ணன் நாகராசா**
(பத்தர்)

திதி:-18-02-2000

அன்புள்ள அப்பாவே!
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது இத்துயரம்
எமது உயிர் உள்ளவரை உம்நினைவு
எமது நெஞ்சைவிட்டு அகலாது.

மனைவி, பிள்ளைகள்
தாய், சகோதரசகோதரிகள்,
மைத்துனர்கள்.

88/56, கேசாவில்,
பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(73789)

## சிற்பகலாநிதி சி. அமரசிங்கம் பாராட்டுவிழாச் சிறப்பு மலர்

# நாதஸ்வரத்தை உள்ளூரில் உருவாக்கிய கலைப்பெருமகன்

மரங்கள் பல ரகம். ஒவ்வொன்றும் அதன் வளர்ச்சியிலும், தரும் பலன்களிலும் பல விதம். விதையிலே சிறியதாய், வளர்ந்ததும் பெரியதாய், விண்ணுற ஓங்கி வளர்ந்து, கிளை பரப்பி, செழித்து, மலர்ந்து, மண்ணுக்கு நிழல் கொடுத்தும், மண்ணுயிர்க்கு பலன்கள் பல ஈய்ந்தும் வரும் மரங்கள் பலவற்றை நாம் காண்கின்றோம்.

அதேபோன்று மனிதர்களும் பலவிதம். பலர் மனிதர்களாகவே வாழ்கின்றார்கள். சிலர் மனிதர்களுள் மாணிக்கங்கள் ஆகின்றார்கள். இன்னும் சிலர் நினைக்க முடியாத நற்செயல்களைச் செய்து நெஞ்சில் என்றுமே மறக்க முடியாதவர்களாக மிளிர்ந்து விடுகின்றார்கள். இத்தன்மையில் சிற்பக் கலாநிதி அராலியூர் சின்னத்தம்பி அமரசிங்கம் அவர்கள் எனது இதயத்தில் மாத்திரமன்றி நாதஸ்வரக் கலைஞர்கள் எல்லோர் மனங்களில் ஆழத்தில்

### கான கலாநிதி, கலாசூரி
### என், கே, பத்மநாதன்
### வாழ்த்துகிறார்

மறக்க முடியாத இடத்தைப் பெற்றுவிட்டார்கள்.

இசையால் மயங்காத உயிர்கள் இல்லை எனவும் இறைவனையே இசையால் இலகுவில் காணலாம் எனவும் புராணங்கள் கூறுகின்றன. மரம், செடி, கொடிகள் கூட இசையால் மலர்ச்சியுற்று வளர்கின்றன என விஞ்ஞானம் நிரூபித்திருக்கிறது. இசைத்துறையில் நாதஸ்வர இசையும் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்து, துன்பம் துயர் துடைத்து, இன்பம் இணைக்கும் இனிய இசையாக, மங்கள இசையாக துலங்குகின்றது. இந்த இனிய நல்லிசையை உருவாக்கும் அருமையான கருவியை இலங்கையில் முதன் முதலில் ஒரே ஒருவர் மாத்திரம் தனது சொந்த முயற்சியால் உருவாக்கினார், அதனை எதுவித குறைபாடுமின்றி, இந்தியாவில் இருந்து தருவிக்கப்படும். நாதஸ்வரத்துக்கு இணையாக அமைத்து கைகளில் தவழ விட்டிருக்கிறார் என்றால், அவரை இக் கருவியை வாசிக்கும் நாதஸ்வரக் கலைஞர்கள் மாத்திரமன்றி முழு இசை உலகமுமே பாராட்ட வேண்டும்; போற்ற வேண்டும்; இதையிட்டு மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதே சிறியேனுடைய கருத்தாகும்.

எமது நாட்டில் முதன்முதல் நாதஸ்வரக் கருவியை உருவாக்கிய பெருமை மாத்திரமல்ல, சிற்பக் கலையிலும் கூட அமரசிங்கம் அவர்கள் சிறிதளவேனும் குறைந்தவர் அல்லர். இவர் கைவண்ணத் திறமையினால் சிற்பக் கலை நுணுக்கத்தினால் எத்தனை, எத்தனை தேர்கள், மஞ்சங்கள், வாகனங்கள், சிற்பரூபங்கள் காண்போர் கண்களைக் கவர்ந்து கலை நெஞ்சங்களை மகிழ்வித்து கலை ஒளி வீசி இம்மண்ணின் மக்களை மகிழ்விப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

அமரசிங்கம் ஸ்தபதியாருடன் நான் பற்பல ஆண்டுகளாகப் பழகி வந்துள்ளேன். ஆனால் சென்ற 10 வருட காலமாகவே மிக மிக நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிட்டிற்று. இவர் ஓர் அருமையான மனிதர், அன்பு மிகுந்த பிறப்பு. அழகு தந்த படைப்பு என்றே கூறவேண்டும், இவரின் அன்பான பேச்சும், பாசம் மிகுந்த உபசரிப்பும், சிந்தையைக் குளிரவைக்கும். பண்பான இதயம், பாசம் பெருகும் உள்ளம் கொண்டவர். இவர் ஒரு கடமை வீரர் மாத்திரமல்ல, கட்டுப்பாடான மனிதரும் கூட, அகத்தின் அழகு முகத்தில் தெரியும் எனும் முதுமொழியின் உண்மைக்கு இவரை உதாரணம் காட்டலாம். நீதி, நியாயம், நேர்மை இவற்றின் நிறைகுடம்.

நான் இவருடன் பழகிய அனுபவத்தைக் கொண்டு இவரை ஒரு சிறந்த சிற்பக் கலைஞனாக மாத்திரமல்ல, மனிதனுக்கு அமைய வேண்டிய நற்குணங்கள் அத்தனையும் தன்னகத்தே கொண்ட ஓர் உத்தமனாகவே காண்கின்றேன்.

#### ஏழுவருடகாலமாக

கடந்த ஏழு வருடகாலமாக அன்பர் அமரசிங்கம் அவர்களின் நாதஸ்வரக் கருவியையே எனது கலைச்சேவையின் உன்னதமான பெரும் பொக்கிசமாக என்கலைத்தெய்வமாகநினைந்து மதித்து மனதார மகிழ்கின்றேன். நான் மாத்திரமல்ல இங்குள்ள நாதஸ்வரக் கலைஞர்கள் பெரும்பாலானோர் என்னைப் போலவே அமரசிங்கம் அவர்களின் நாதஸ்வரத்துக்கே முதன்மை இடம் கொடுத்து வாசித்துத் திருப்தியடைகின்றார்கள். இலங்கையில் மாத்திரம் என்றில்லாது பிற நாடுகள்பலவற்றிலும் — எங்கெல்லாம் தமிழர்கள் செறிந்து பரந்து வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம்—நடை

(8 ஆம் பக்கம் பார்க்க)



## நல்லை ஆதீனமுதல்வர் அருளாசி

அன்புசால் பெருந்தகையீர்!

சிற்பகலாமணி சின்னத்தம்பி அமரசிங்கம் அவர்களைப் பாராட்டி விழா எடுப்பதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். மனிதனை மனிதனாக்குவது கலை.

கலை மூலமாக இறைவனையும் ஆன்மாவையும் ஒன்றுபடுத்துவது இசை இசையில் முக்கியமான இடத்தை வகிப்பது மங்களவாத்தியக் கலை. மங்களவாத்தியக் கலைக்கு ஆதாரமாக உள்ளது நாதஸ்வரம்.

மங்கள இசை பிறப்பிக்கும் நாதஸ்வரக் கருவியை எமது பிரதேசத்திலேயே உற்பத்தி செய்து வருகிறார் அராலியூர் சின்னத்தம்பி அமரசிங்கம். இது எமது நாட்டுக்குப் பெருமை.

இவர் தமது பணியில் தொடர்ந்து பணியாற்ற இறைவன் ஆசீர்வதிப்பாராக. இவருக்கு விழா எடுத்துச் சிறப்பிக்கும் நாதஸ்வரக் கலைஞர்களை வாழ்த்துகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்
2 ஆவது குருமஹா சந்நிதானம்,
நல்லை ஆதீனம்.

# நானூறு நாதஸ்வரங்களை ஆக்கி கலைஞர்களுக்கு உதவிய சாதனையாளன்

இலங்கைத் தமிழர்களின்கலைப்பாரம்பரியத்திற்குக் காலம் தோறும் பல திறப்பட்ட கலைஞர்கள் தத்தம் பங்களிப்புக்களைச் செய்து வந்துள்ளனர். அத்தகைய கலைஞர் மரபில் பிறந்தவர்களில் ஒருவரும் அராலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகக் கொண்டவருமான திரு. சி. அமரசிங்கம் குறிப்பிடப்பாலர். இவரின் முன்னோர்களில் ஐந்தாவது தலைமுறையைச் சேர்ந்தவர் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் திருகோணமலை முத்துக்குமாரசுவாமி கோயிலுக்கு அமைத்த தேர் இன்றும் பொலிவுடன் விளங்குகின்றது.

இவர் முன்னின்று உருவாக்கிய வற்றுள் அராலி வடக்கு முருகன் தேர், கொழும்பிலே சேர் பொன். இராமநாதன் அமைத்த பொன்னம்பலவாணேசர் தேர், நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்திலுள்ள சுப்பிரமணியர் தேர், மாவைக் கந்தன் மஞ்சம், யாழ்ப்பாணம் கடைத்தெரு பிள்ளையார் தேர் முதலியன குறிப்பிடற்பாலன.

### பேராசிரியர் வி. சிவசாமி

இவற்றிலே கலைத் திறமையின் முத்திரையினைப் பதிப்பதுடன் இவரின் கலைப் பணிகள் நின்று விடவில்லை. இவற்றைவிடப் பிறிதொரு கலைப்படைப்பிலும் தமது மதி நுட்பத்தினையும், கலைத் திறனையும் ஒரு வகையில் மேதாவிலாசத்தினையும் வெளிப்படுத்தியுள்ளார். அதாவது தமிழிசை—கர்நாடக இசைக்குரிய—பிரபல்யமான வாத்தியங்களில் ஒன்றான நாதஸ்வரத்தின் ஆக்கமாகும்.

பல நூற்றாண்டுகளாக இந்த இசைக்கருவி தமிழகத்திலிருந்தே இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு கலைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த நூற்றாண்டின் அறுபதுகளிலும் எழுபதுகளிலும் இதனை இங்கு கொண்டுவருவதிலே சில கஷ்டங்கள் ஏற்பட்டன. எனவேஇந்த இன்னிசைக் கருவியை எம்நாட்டில் உருவாக்க வேண்டும் என்ற எண்ணக்கரு, நாதஸ்வரக் கலைஞர்கள் மத்தியிலே நிலவிவந்தது.

இதற்கான வாய்ப்பு சுமார் 35 ஆண்டுகளின் முன் அராலியூரில் ஏற்பட்டது. திரு. சி. அமரசிங்கத்தின் உறவினர் ஒருவர் வீட்டில் சங்கானையில் இடம்பெற்ற வைபவத்திலே பல நாதஸ்வர தவில் கலைஞர்கள் சிறப்பாகப் பங்குபற்றினர். அவர்களிலே மறைந்த பிரபல நாதஸ்வர வித்துவான் வி. ஏ பாலகிருஷ்ணன் திரு. அமரசிங்கத்திடம் நாதஸ்வரத்தினை உருவாக்கி எம்நாட்டுக் கலைஞர்களுக்கு உதவி செய்யுமாறு கூறி அவரை ஊக்குவித்தார். இதனை தேவவாக்காகக் கொண்டுஅமரசிங்கம் அன்றுதொடக்கம் தம் குலதெய்வங்களான கரைப்பிட்டி விநாயகரையும், காளியம்மனையும், மனதிற் கொண்டு செயற்படத் தொடங்கினார்.

நாதஸ்வரம் செய்வது எளிதான காரியமன்று. இதில் இவருக்கு முன்னோரின் அனுபவமில்லை. அதே வேளையில் இலங்கையிலும் இது பற்றிய ஞானம் உள்ளோர் எவருமிருந்திலர். தமிழகத்திற்கூட ஒரு சில குடும்பத்தினரே நாதஸ்வர ஆக்கத்திலே கைதேர்ந்திருந்தனர். அவர்களும் இக்கலையை மற்றவர்களுக்கு எளிதிலே கற்பிக்கமாட்டார்கள்.

#### முதற் பரிசோதனை

முதற்பரிசோதனை நாதஸ்வரத்தினை கருங்காலி மரத்திலே செய்தார். இதனை இவரின் இல்லத்திலே நாதஸ்வர வித்துவான் வி. ஏ. பாலகிருஷ்ணனும் மற்றும் பிரபல கலைஞர் வி. கே. பஞ்சமூர்த்தியும் மூன்று மணித்தியாலங்களுக்கு நன்கு வாசித்தனர். இது நல்ல முயற்சியாக இருந்தாலும் நீடித்த பலனைத் தரவில்லை.

அமரசிங்கம் தொடர்ந்து செயற்பட்டார். இந்த இசைக் கருவியை ஆக்குவதற்குப் பரிசோதனை முறையில் ஆச்சா மரமே சிறந்தது என்பதை உணர்ந்தார். இந்தியாவிலும் இம் மரமே நன்கு பயன்படுத்தப்படுகிறது. இலங்கையிலும் இது கிடைக்கிறது. சுமார் பதினைந்து ஆண்டுகளாக தெய்வத்திருவருள் தோன்றாத் துணையாக நிற்க, தம் மதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னையின் ஆசி

சிற்பக்கலை வண்ணங்களால் திருக்கோயில்கள் சிறப்புப் பெற்று விளங்குவது கண்கூடு. இறையம்சம் பெற்றவர்கள் இக்கலைஞர்கள் என்று கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். எல்லாம் வல்ல பரம்பொருளை எமது புறக்காட்சிக்குக் கொண்டு வருபவர்கள் இவர்களே. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இக்கலைஞர்களால் எமது சைவத் திருக்கோயில்கள் வரலாற்றுப் பெருமை பெற்று வந்துள்ளன.

இவர்களுக்கு மன்னர்களும் வள்ளல்களும் ஆலய பரிபாலனங்களும் ஒன்று சேர்ந்து கௌரவம் அளித்து வந்தமையை திருக்கோயில் வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய பெரும் பாராட்டுக்குரியவராக இன்று எம்மத்தியில் விளங்குபவர் அராலியூர் திரு. சி. அமரசிங்கம் ஆச்சாரியார் ஆவார். எம்மண்ணுக்கு அணி செய்யும் ஒரு சில சிற்பாசாரியர்களில் இவரும் எமது பாராட்டுக்குரியவர் என்று கூறுவதில் எனக்குப் புளகாங்கிதம் ஏற்படுகிறது.

தெய்வபக்தியும் அடக்கமும் கலை உள்ளமும் வாய்க்கப்பெற்றவர் இவர். நாதஸ்வரக் கலைஞர்களுக்காக இவர் ஆற்றியிருக்கும் அரும்பெரும் பணி மிக மிக மெச்சப்படவேண்டியதொன்று. முதற்றரமான நாதஸ்வரக் கருவியை உருவாக்கிய நன்றிக்காக நாதஸ்வரக் கலைஞர்கள் இப்பெரியாருக்கு விழா எடுத்துப் பாராட்ட இருப்பது மிகப் பொருத்தமானதே.

இறை ஆசியும் பெருமக்களின் பாராட்டும் இப்பெரியாரை மேலும் மேலும் சிறப்பாக வாழ வைக்கும் என வாழ்த்தி அமைகின்றேன்.

கலாநிதி, சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி.
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

மகாராணி
யாழ்ப்பாணம்.

Jeisheba Agency
132, Stanley Road,
Jaffna.

V. S. B. Group
99, 105, PowerHouse Road,
Jaffna

Dilka Furniture Palace
(SHOW ROOM)
NO. 441/1, K.K.S. Road.
Sivan Corner, Jaffna.

பொ. நேசலிங்கம்
அரசடி லேன்,
சங்கானை.

## பாராட்டி வாழ்த்துகிறோம்

கூட்டுறவுத்துறையில் பழுத்த அனுபவமும்
கூட்டுறவுச் சட்ட விதிகளில் பாண்டித்தியமும்
அவரவர் எல்லை அறிந்து வழி காட்டும்
மிகுந்த தகுதியும் மும்மொழி ஆற்றலுமுடைய
கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்

**திரு. கு. பாலசுப்பிரமணியம்**

அவர்கள்

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டுகிறோம். அவர்கள் சேவை மேலும் சிறப்படைய வாழ்த்துகிறோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
கட். நெல். ப. நோ. கூ. சங்கம்.

கரவெட்டி. (சி/11051)



இலங்கை

மின்சார சபையின்

சகல மின் பாவனையாளர்களுக்குமான

## மின் தடை பற்றிய அறிவித்தல்

காங்கேசன்துறை மின்மார்க்கங்களில் அவசர திருத்த வேலைகள் செய்யவிருப்பதனால் 2000-02-20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் மாலை 4-30 மணி வரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

இதனால் தங்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக வருந்துகிறேன்.

''சூழல் மற்றும் அபிவிருத்திகளுக்குக் கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை''

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம். (சி/11055)


## வாழை நோய்

புன்னாலைக்கட்டுவன், பெப். 18

புன்னாலைக்கட்டுவன், ஈவினைப் பிரதேசங்களில் கப்பல் வாழைகளை பழுப்பு நோய் பீடித்துள்ளதால் மேற்படி கப்பல் வாழைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

இந்நோய் காரணமாக வாழைக் குலைகளுடன் வாழை மரங்கள் சரிந்து விழுகின்றன.

ஆரம்பத்தில் ஓரிரண்டு வாழைகளில் ஏற்படும் இந்த நோய்த் தாக்கம் பின்னர் வாழைத் தோட்டம் முழுவதும் பரவி கப்பல் வாழைகளை அழித்து விடுகின்றன என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (உ-133)

## மிதி வெடிகளை அகற்றக்கோரிக்கை

வலி. தென் மேற்கு, பெப். 18

விளான் மற்றும் உயரப் புலம் பகுதிகளில் உள்ள மிதி வெடிகளை அகற்றுவது தொடர்பாக வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் நேற்று முன்தினம் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட நிறுவன அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார்.

மேற்படி பகுதிகளில் மிதி வெடிகள் அகற்றப்படாததால் விளான் பகுதியில் உள்ள மக்கள் சேமக்காலைக்குச் செல்ல முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் —

விவசாயிகள் மீளக்குடியமர்ந்தபோதும் விவசாய செய்கையில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளதாகவும்— அவர் தெரிவித்தார்.

இதேவேளை மிதிவெடிகள் உள்ளதாகக் கருதப்படும் பிரதேசங்களின் விவரங்களும் எழுத்து மூலம் ஒப்படைக்கப் பட்டது. (உ-185)


## முதலாவது பிறந்தநாள்வாழ்த்து



### செல்வி தர்மிதா தர்மரத்தினம்
(18 - 02 - 2000)

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த
தர்மரத்தினம் — கிரிஜா தம்பதிகளின்
அருந்தவப் புதல்வி
தர்மிதா

இன்று (18-02-2000) தனது முதலாவது பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசை அண்ணா, அம்மம்மா, அப்பம்மா, மாமா குடும்பத்தினர், பெரியப்பா குடும்பத்தினர், ஆசையப்பா குடும்பத்தினர், அத்தை குடும்பத்தினர் ஆகியோர் எல்லாம் வல்ல இறைவன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

— குடும்பத்தினர்

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (73739)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

மாதனை பருத்தித்துறையைச் சேர்ந்த
பகிதரன் - நிவேதினி தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

### செல்வன் தனுஷன்

**தனது முதலாவது பிறந்தநாளை இன்று (18-02-2000)**

லண்டனிலுள்ள தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா,
அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், மாமாமார்,
அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார்,
ஆசை மச்சான், தாத்தாமார் பாட்டிமார் மற்றும்
உற்றார், உறவினர்கள், பெரியோர்கள் அனைவரும்
எல்லாம்வல்ல காளியம்மன், கண்ணகையம்மன்
திருவருளால் சகல சௌபாக்கியங்களும் ஐஸ்வரியங்களும்
பெற்று நீடூழிகாலம் சிறப்புடன் வாழ
வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:

**முரளிச் சித்தப்பா**
(லண்டன்)



செல்வன் தனுஷன்
(18-02-2000)

(73595)

# கிளின்ரனின் விஜயத்துக்காக பெருந் தொகை நிதி செலவீடு

## இந்தியாவும், பாகிஸ்தானும் ஏட்டிக்குப் போட்டியாக

நியூயோர்க், பெப். 18
மார்ச் மாதம் தெற்காசியாவுக்கு விஜயம் செய்யும் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்ய வேண்டுமா என்பது குறித்து வாஷிங்ரனில் வாதப் பிரதிவாதங்கள் நடந்து வருகின்றன.

அவர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யக் கூடாது என்று இந்திய அரசுக்கு ஆதரவான சில நிறுவனங்கள் தெரிவித்து வருகின்றன.

அவர் பாகிஸ்தானுக்குச் சென்றேயாக வேண்டும் என்று பாகிஸ்தானுக்கு ஆதரவான நிறுவனங்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

இதற்காக இரு நாடுகளும் பெருந் தொகையான பணத்தினைச் செலவு செய்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான பிரசாரங்களுக்கு மாதமொன்றிற்கு இந்தியா 75 ஆயிரம் அமெரிக்க டொலர்களையும் பாகிஸ்தான் இதில் அரைவாசித் தொகையையும் செலவு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5)

# நடிகை மீது வழக்கு

இஸ்லாமாபாத், பெப். 18
பாகிஸ்தானின் திரைப்பட நடிகை ஓலிமா மீது அந்நாட்டு அரசு தேசத்துரோகக் குற்றம் சுமத்தி வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

அமெரிக்காவில் நடைபெற்ற கலைநிகழ்வு ஒன்றில் இந்தியாவை வாழ்த்திப் பாடினார் என்ற குற்றச் சாட்டின் பேரிலேயே இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

பாகிஸ்தானின் திரைப்படங்களில் கவர்ச்சிவேடங்களில் நடித்து வருபவர் ஓலிமா. இவர் ரசிகர்களின் பேராதரவைப் பெற்றவருமாவார்.

(க-5)

# மத்தியஸ்தம் வகிக்க அமெரிக்கா தயார்!

## கிளின்ரன் மீண்டும் தெரிவிப்பு

நியூயோர்க், பெப். 18
காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்கா மத்தியஸ்தம் வகிப்பதற்கு என்றுமே தயாராகவுள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் மீண்டும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவும் பாகிஸ்தானும் விரும்பிக் கேட்டுக்கொண்டால் நாம் மத்தியஸ்த முயற்சிகளில் கட்டாயம் ஈடுபடுவோம். காஷ்மீர் பிரச்சினையால் தெற்காசியப் பிராந்தியத்தில் பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

(ஐ-5)

# கம்போடியப் பிரதமர் இந்தியாவுக்கு விஜயம்

நெப்பொன், பெப். 18
கம்போடியப் பிரதமர் ஹுன்சென் நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயமாக இந்தியா, மியான்மர் ஆகிய நாடுகளுக்குச்செல்லவுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் கம்போடியா தென்கிழக்காசிய நாடுகளுடன் சேர்ந்து கொண்டதன்பின் கம்போடியப் பிரதமர் மியான்மருக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவை.

கம்போடியப் பிரதமர் ஒருவர் 20 வருடங்களுக்குப்பிறகு இந்தியாவுக்கு மேற்கொள்ளும் விஜயம் இதுவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# விமான நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு

புதுடில்லி, பெப். 18
இந்தியாவில் விமான நிலையங்களின் பாதுகாப்பினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான தனியான பாதுகாப்பு பிரிவு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக இந்திய விமானப் போக்குவரத்து இணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே விமான நிலையத்தில் விமானப் பயணிகளை மூன்று தடவைகள் சோதனை செய்யும் நடவடிக்கைகள் அமுலில் உள்ளன.

(ஐ - 5)

# ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிப்பு

புதுடில்லி, பெப். 18
கார்கில் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் மற்றும் பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவியது எவ்வாறு என்பதுபற்றிச் சுப்பிரமணியம் ஆணைக்குழு சமர்ப்பித்த கார்கில் விசாரணை அறிக்கை வரவு செலவுத் திட்டக் கூட்டத்தின்போது சமர்ப்பிக்கப் படவுள்ளது.

வரவுசெலவுத் திட்டக் கூட்டத்தில் இதனைச் சமர்ப்பிப்பது எனக் கடந்த புதன் கிழமை கூடிய மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(க-5)

# குறட்டை விடும் பெண்களுக்கு இருதய நோய் வாய்ப்பு அதிகம்

வாஷிங்ரன், பெப். 18
குறட்டை விட்டால் ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் இருதயநோய் வரும் வாய்ப்பு அதிகம் என்று அமெரிக்காவில் உள்ள பெண்கள் மருத்துவ மனை ஒன்றின் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இவர்கள் 8 வருடங்களாக 71 ஆயிரத்து 779 பெண்களை இந்த ஆராய்ச்சிக்கு உட்படுத்தினர்.

தினசரி குறட்டை விடும் பெண்கள் 33 சதவீதத்துக்கும் மேலாக இதய நோய்களால் அவஸ்தைப்படுவதாகவும் —

எப்போதாவது குறட்டைவிடும் பெண்கள் 20 சதவீதமானோரே இதய நோய்களால் பாதிக்கப்படுகின்றனர் எனவும் —

பெண்களில் 25 சதவீதம் பேர் எப்போதுமே குறட்டை விடுவதில்லை. 25 சதவீதம் பேர் எப்போதாவது குறட்டை விடுகின்றனர். 10 சதவீதம் பேர் தினசரி குறட்டை விடுகின்றனர் என்றும் —

அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

இதேவேளை —

இந்த ஆராய்ச்சியின்படி இதுவரை அறுநூற்று 44 பெண்களுக்கு இருதய நோய் வந்துள்ளது. 398 பேர் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த மருத்துவமனை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

(ஐ-க)

# சாராயம் அருந்திய 27 பேர் மரணம்!

## பங்களாதேஷில்

டாக்டா, பெப். 18
பங்களாதேஷின் சினி நகரில் கள்ளச் சாராயம் அருந்தி நேற்று முன்தினம் 27 பேர் வரை உயிரிழந்துள்ளனர். 50 பேர் வரை நோய்வாய்ப்பட்டுள்ளனர்.

உள்ளூரில் உள்ள ஹோமியோபதி மருத்துவர் ஒருவர் இந்தக்கள்ளச் சாராயத்தை உற்பத்தி செய்து விற்பனை செய்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கள்ளச் சாராயம் அருந்தியவர்களில் சிலரின் நிலை மிக மோசமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

(க)

# நீரில் சயனைட்விஷம்பரவுவதைத் தடுக்க ஐ. நா. நிபுணர் குழு

## யூகோஸ்லாவியாவுக்குப் பயணம்

லண்டன், பெப். 18
யூகோஸ்லாவியாவுக்கு ஐ. நா. சபையைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழு ஒன்று விரைந்துள்ளது.

ஹங்கேரி மற்றும் யூகோஸ்லாவிய ஆறுகளில் சயனைட் விஷம் கசிந்துள்ளமையினால் ஏற்பட்டுள்ள கடல் வாழ் உயிரின அழிவைத் தடுக்கும் முகமாகவே விஞ்ஞானிகள் அங்கு சென்றுள்ளனர்.

விஞ்ஞானிகள் தற்போது கடல் மற்றும் ஆற்று நீரினைப் பரிசோதித்து வருகின்றனர்.

றுமேனியாவில் உள்ள தங்கச் சுரங்கங்களில் இருந்து இந்த சயனைட் விஷம் கசிந்து வருவதாகவும்—

அந்த தங்கச் சுரங்கங்கள் ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமானது எனவும்—

தெரிவிக்கப்படுகின்றது.

(க-5)

யாழ். லயன்ஸ் கழகம்
நடத்தும்
இலவச
கண் பரிசோதனை

இடம்: யாழ். வைத்திய நிலையம்
166. முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)

காலம்: இன்று [18 - 02 - 2000]
வெள்ளிக்கிழமை.
நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை

பரிசோதிப்பவர்: லயன். . ஜெயக்குமார்
P. J. பர்னாண்டோ ஸ்தாபனம்

★ பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் இச் சேவைகளைப் பெற விரும்புவோர் மேற்படி வைத்திய சாலையில் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

லயன் பேராசிரியர்
இரா. சிவச்சந்திரன்
தலைவர்
யாழ். லயன்ஸ் கழகம்.

(73792)

புலமைப் பரிசில்
2000

27 ஆவது பரீட்சையில்
அதி கூடிய
புள்ளி பெற்றோர்

த. திவாகர்
யா. பரி. யோ. க.
ஜெ. கிருத்திகா
யா. இ. ஆ. பா.
கை. தனுஷன்
யா. பரி. யோ. க.
பா. தர்மினி
யா. வட. இ. ம. கல்.
தி. உமாசங்கர்
யா. உரு. சை. த. வி.
க. ஸ்வர்ணாங்கி
ச. சாமளை
யா. இ. ம. ஆ. பா.
யோ. ரஜீகன்
யா. இ. ஆ. பா.
த. சுவாஸ்கர்
யா. கொ. இ. ஆ. பா.
ஜெ. ஜெனோஜினி
யா. உரு. சை. த. வி.

அடுத்த பரீட்சை
20—02—2000

மாதாந்தப்பரீட்சை
தரம்(2 முதல் 8 வரை)
19—02—2000
அன்று நடைபெறும்.

BOND யாழ்நகர்.

(73793)

கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண வலயக் கல்வித்திணைக்களத்தின்
உடற்கல்விக்குப் பொறுப்பான உதவிக்
கல்விப் பணிப்பாளர்

திரு. த. அருணகிரி ராஜாவின் தந்தையார்

வடிவேல் தங்கராஜா

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாருக்கு எமது அஞ்சலியையும் தெரிவிக்கின்றோம்.

கல்விப்பணிப்பாளரும் பணியாளர்களும்.
வலயக்கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(73795)

இதய அஞ்சலி

Mrs. MARY BACKUS

Former, Head Mistress, J/ Methodist
Girl's High School - Point Pedro

40 வருடங்களுக்கு மேலாக, எங்கள் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்து 1968 இல் ஓய்வு பெற்று, தனது 93 ஆவது வயதில் இறைபதம் அடைந்துள்ளார். இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/ மெதடிஸ்த பெண்கள்
உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.

(சி/11065)

# கண்ணீர் அஞ்சலி

## தம்பிஐயா சண்முகநாதன்

(மின்மானி வாசிப்பவர், இ. மி. ச, சாவகச்சேரி)

அவர்களின் திடீர் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். இவரின் பிரிவால் கவலையில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

**மின் பாவனையாளர் சேவை நிலையத்தினர்,**
சாவகச்சேரி

(73796)

# இதய அஞ்சலி

## தம்பிஐயா சண்முகநாதன்

(மின் மானி வாசிப்பவர், இ.மி.ச, சாவகச்சேரி)

அவர்களின் திடீர் அகாலமரணம் அறிந்து அதிர்ச்சி அடைந்துள்ளோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் எம் கவலையையும் பகிர்ந்து கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மின் பாவனையாளர் சேவை நிலையத்தினர்.**
யாழ்ப்பாணம்.

(73797)

# மரண அறிவித்தல்கள்

## மார்க்கண்டு இராசரத்தினம்

(யாழ். பல்கலைக்கழக கணனி விஞ்ஞான பீட எழுதுவினைஞர்)

சரவணையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு இராசரத்தினம் (09.02 2000) அன்று காலமானார்.

அன்னார் றஞ்சலாதேவியின் (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) அன்புக் கணவரும், மார்க்கண்டு தங்கம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற இளையதம்பி பொன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், குணரட்ணம், செல்வரட்ணம் (தபாலகம், வேலணை), யோகராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற லலிதலோஜினி, அருந்தவநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், நடராசன் (சாரதி, குலம் கிறீம் ஹவுஸ்), லோகாஞ்சனா (ஜேர்மனி) ஆகியோரின் அண்ணரும், நிசாந்தன், ரிஷிகேசன், சுகந்தா, டர்ஷிகன் ஆகியோரின் ஆசை சித்தப்பாவும், லக்மி (ஜேர்மனி) லவன் (ஜேர்மனி) ஆகியோரின் ஆசை மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10-02-2000) அன்று அவரது மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்–

தகவல்:
**திருமதி இ. றஞ்சலாதேவி**
(மனைவி)

வடலித்தோட்டம்,
மானிப்பாய் வடக்கு.

(73794)

## வடிவேலு தங்கராஜா

(முன்னாள் தலைவர் கிராம முன்னேற்றச் சங்கம், சமாதான சபை)

உடுப்பிட்டி கம்பர்மலைத் தலைவர் தங்கராஜா காலமானார்.

அன்னார் காலம் சென்ற வடிவேலு வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலம் சென்ற மகாலிங்கம் பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரரும் தங்கத்தின் அன்புக் கணவரும் துரைராஜா (Lawrie Muthu Krishna & Co. Cnartered Accountants), அருணகிரிராஜா (உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்), சுரேந்திரராஜா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத்தந்தையும் கமலராணி (இலங்கை வங்கி, செயற்பாட்டுமுகாமையாளர், வடபிராந்தியம்), செல்வமகள் (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), அம்பிகா (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மாணவர்களான நிராஜ் (மொறட்டுவ பல்கலைக் கழகம்), நிருஜா (கொழும்பு மெதடிஸ்த கல்லூரி), நீராஜா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), நிருஷன் (பரியோவான் கல்லூரி), தர்ஷன் (டென்மார்க்), தாட்சாயணி (டென்மார்க்) ஆகியோரின் பாசமுள்ள பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 19-2-2000 சனிக்கிழமையன்று நடைபெற்று காலை 10 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
**த. துரைராஜா**
(மகன்)

கம்பர்மலை,
உடுப்பிட்டி

(சி/11067)

# கணனிமயப்படுத்தப்பட்ட 'பாஸ்' முறை

# மட்டக்களப்பில் துரித ஏற்பாடுகள்

மட்டக்களப்பு, பெப். 18

மட்டக்களப்பில் பிரயாண அனுமதி மற்றும் வதிவிட அனுமதி வழங்கும் பணிகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இந்த அனுமதி வழங்கும் நடவடிக்கையை கணனிமயப்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

அனுமதி வழங்கும் நடவடிக்கைகள் மட்டக்களப்பு பொதுநூலக கட்டடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்காக இக் கட்டடத்தில் இயங்கிய பொலீஸ் நிலையம் வேறு கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஏப்ரல் முதல் வாரத்தில் அனுமதிகள் வழங்கும் பணியை ஆரம்பிக்கும் பொருட்டு 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பப் படிவங்களும் மட்டக்களப்புக்கு எடுத்துவரப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் பாஸ்வழங்கும் பணிகள் குறித்த வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## குடத்தனையில் கைதானோர் விடுதலை

யாழ்ப்பாணம், பெப். 18

குடத்தனை வடக்குப் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை படையினரால் கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களும் நேற்று முன்தினம் அந்தப் பகுதி கிராம அலுவலர் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

குடத்தனை வடக்கைச் சேர்ந்தவர்களான செல்வரட்ணம் ஜெயக்குமார் (வயது 24), ஜேசுராசா வினோதராசா (வயது 19), மரியதாஸ் றெக்ஸ்சிஸ் அமலதாஸ் (வயது 26) ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களது கைது பற்றியும் பின்னர் விடுதலை செய்யப்பட்டமை பற்றியும் இவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10-9)

## மாதாந்த கருத்தரங்கு

அகவொளி நிலையத்தினால் நடத்தப்படும் மாதாந்த போயாக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

''குடும்பத்தில் சுகவாழ்வு'' என்னும் விடயம் பற்றி எஸ். துரைராசா (ராஜன் யோகி) உரையாற்றவுள்ளார்.

(ஐ-86)

**விஞ்ஞானபீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்**

**1999/2000 கல்வியாண்டு–**

## புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர்கள்

விஞ்ஞான பீட அறிமுகக் கூட்டம் 08/03/2000 (மு. ப. 9.00 மணிக்கு) நடைபெறும். அடிப்படைக் கற்கை நெறிகளாகிய கணனிப் பாடநெறியும், ஆங்கிலப் பாடநெறியும் 08/03/2000 (பி.ப. 2.00) தொடக்கம் 08/04/2000 வரை நடத்தப்படும். யாழ். பல்கலைக்கழகத்தில் 1999/2000 கல்வியாண்டுக்கு தங்களைப் பதிவு செய்த மாணவர்கள் யாவரும் இந்த நிகழ்ச்சிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கணனி விஞ்ஞானத்தை முதலாவது வருடத்தில் ஒரு பாடமாகக் கற்க விரும்பும் மாணவர்கள் விஞ்ஞானபீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து 31-03-2000 ஆம் திகதிக்கு முன் பீடாதிபதி அலுவலகத்தில் கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தெரிவு க. பொ. த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அமையும்.

விஞ்ஞானபீட விரிவுரை வகுப்புகள் 17-04-2000 இல் ஆரம்பமாகும்.

- பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
16- 02- 2000

சி/11070

# கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபை யாழ். பிரதேசத்தில் பட்டியலுனராகக் கடமையாற்றியவரும் எமது சங்க உறுப்பினருமான

## தம்பிஐயா சண்முகநாதன்

அவர்கள் கொழும்பில் மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியுற்ற எமது சங்க உறுப்பினர்கள் அன்னாரது குடும்பத்துக்கு ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் கண்ணீருடன் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

**நிர்வாகிகளும் உறுப்பினர்களும்,**
**இலங்கை மின்சார சபை ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம்.**

(73799)

# மரண அறிவித்தல்கள்

## சூசைப்பிள்ளை திருச்சிலுவை

(அருளானந்தம்)

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை திருச்சிலுவை (அருளானந்தம்) அவர்கள் நேற்று (17-02-2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (19-02-2000) சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு அல்லைப்பிட்டி புவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் நடைபெறும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்**

2 ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

(73804)

## இராசையா நாகம்மா

(நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா நாகம்மா 17 - 02 - 2000 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சிவகுரு தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், அரசரெத்தினம், மருதலிங்கம் (சின்னமணி — சுவிஸ்), செல்வரெத்தினம் (தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை), விஜயலக்சுமி, விக்னேஸ்வரன் (ஜேர்மனி), மருதையினார் (வைத்திய கலாநிதி, கண்டி அர. போ. ம. மனை), செல்வராணி, ஸ்ரீஸ்கந்தராஜா (நூலகர் நயினாதீவு), நகுலேஸ்வரன் (வன்னி), நகுலேஸ்வரி (வன்னி), கனகரெத்தினம் (வன்னி), யோகநாதன் (ஐங்கரன், இராமநாதபுரம்), காலஞ்சென்றவர்களான அருளானந்தம் (மூர்த்தி), குணேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுசீலா, சறோஜினிதேவி, காஞ்சனா, துரைரெத்தினம் (கோபிகா), சுலோசனாதேவி, கனகரத்தினம் (கண்ணன் — பரியோவான் கல்லூரி), அம்பாலிகை, வளர்மதி, பரமேஸ்வரன் (தென்னை அபிவிருத்திச் சபை ஆணையாளர், கிளிநொச்சி), கனகாம்பிகை, ஆனந்தாதேவி, வனா (கொக்குவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-2-2000) வெள்ளிக்கிழமை காலை 11-00 மணியளவில் அவரின் நயினாதீவு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சல்லித்தறை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**ஸ்ரீஸ்கந்தராஜா**
(ஸ்ரீ)

6 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(73803)

உதயன்

## தேர்தலும் வன்முறைகளும்

இந்தியாவின் பிஹார், ஹரியானா, ஒரிஸா, மணிப்பூர் மாநிலங்களின் சட்டப் பேரவைத் தேர்தல்கள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. மூன்று கட்டங்களாக நடைபெறும் இந்தத் தேர்தல்களில் கடந்த சனிக்கிழமையும், நேற்றும் இரு கட்டங்கள் முடிவடைந்துள்ளன. மூன்றாவது கட்ட வாக்களிப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது. இவற்றுடன் தமிழ் நாட்டில் நேற்று மூன்று சட்டப் பேரவைத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன.

இந்தியத் தேர்தல்களில் வன்முறைகள் சர்வசாதாரணமானவை. வன்முறைகள் இல்லாமல் தேர்தல்கள் நடைபெறுவதில்லை. தேர்தலும் வன்முறைகளும் இரண்டும் கலந்தவை.

ஆனால் தற்போது நடைபெறும் தேர்தல்களில் வன்முறைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன. வன்முறைகள் தொடர்வது ஆபத்தானது.

பாகிஸ்தான் சுதந்திரமடைந்த நாளில் இருந்தே இப்படியான நிலைமை நீடித்தது. இன்று பாகிஸ்தான் அரசியலில் ஸ்திரமின்மை நிலவுகிறது.

முதலாம் கட்ட வாக்களிப்பின் போது பிஹாரில் மட்டும் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மற்றொரு மாநிலமான மணிப்பூரில் 6 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவங்களை இந்தியா போன்ற ஒரு ஜனநாயக நாட்டுக்கு ஆரோக்கியமானவையாகக் கருத முடியாது. கடந்த 50 ஆண்டுகளாகத் தாம் அனுபவித்துவரும் ஜனநாயக உரிமைகளை மக்கள் துஷ்பிரயோகம் செய்ய ஆரம்பித்திருப்பதன் அறிகுறி என்றே இவற்றைக் கூறவேண்டும்.

சனத்தொகையை பொறுத்தவரை இந்தியா உலகிலேயே பெரிய ஜனநாயக நாடு. கடந்த தசாப்த காலங்களில் தெற்காசியாவில் உள்ள பல நாடுகளில் ஜனநாயக நடைமுறைகள் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட போதிலும் இந்தியா தொடர்ந்து அதனைப் பேணி வருகிறது. இதன் மூலம் சர்வதேச அரங்கில் தனக்கென்த் தனியான ஒரு முத்திரையை இந்தியா பதித்து வைத்துள்ளது!

கடந்த ஆண்டு செப்ரெம்பரில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலின் போது வன்செயல்கள் காரணமாக நூற்றுக்கணக்கான வாக்களிப்பு நிலையங்களில் மறு வாக்களிப்பு நடத்தப்பட்டது. தற்பொழுது நடைபெற்று வரும் சட்டப் பேரவைத் தேர்தல்களிலும் இதே நிலைமையே நீடிக்கிறது.

பிஹாரில் நடைபெற்ற முதலாம் கட்ட வாக்களிப்பில் மட்டும் 187 வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப் பதிவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. இந்த வாக்களிப்பு நிலையங்களில் மீண்டும் வாக்களிப்பு நடத்தப்பட உள்ளது.

தேர்தலின் போது ஏற்படும் இத்தகைய வன்முறைகள் சர்வதேச அரங்கில் இந்தியாவுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி வருவதுடன் மறு வாக்களிப்பால் பெரும் பணச் செலவும் ஏற்படுகிறது. ஏற்கனவே மூன்று ஆண்டுகளில் மூன்று தேர்தல்களைச் சந்தித்த இந்தியாவில் தற்போதைய ஆட்சியில் அரசியல் ஸ்திரத் தன்மை ஏற்படும் வாய்ப்பு அதிகமாகக் காணப்படுகிறது.

ஆகவே வன்முறைகளுக்கும் முடிவுகட்டப்படுமானால் சர்வதேச அரங்கில் இந்தியாவின் மதிப்பு மேலும் உயரும்.

# தமது பாரம்பரியங்களைப் பேணுவது சைவ மக்களின் தலையாய கடமை

ஞானக் கதிர்

இராசையா ஸ்ரீதரன்

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார். ஆகவே அரிதினும் அரிதான இந்த மானிடப் பிறவியை எடுத்த நாம் அதன் அருமையை உணர்ந்து நன்னெறியில் செல்லுதல் வேண்டும். உலகில் நாம் செய்யும் நல்வினை, தீவினைக் கேற்பவே எமது வாழ்வும் அமைகிறது.

'புண்ணியமாம் பாவம் போம் போன நாட் செய்தவவை மண்ணிற்பிறந்தார்க்கு வைத்த பொருள்'' என்பதற்கிணங்க புண்ணியமே செய்யத் தக்கது. சைவ நாயன்மார்களும் வைஷ்ணவ ஆழ்வார்களும் நமது முன்னோர்களும் வாழ்க்கை நெறியை வாழ்ந்து காட்டிச் சென்றிருக்கின்றார்கள்.

''கற்க கசடறக்
கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'' என்ற வான் புகழ் வள்ளுவரின் வாக்குக்கிணங்க நாம் படித்தபடி ஒழுகுதல் வேண்டும். சைவ சமய நெறியின்படி மாமிசம் புசித்தல் அறவே விலக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால் நம்மிற் பலர் 'சைவர்' என்று சொல்லிக் கொண்டு 'அசைவர்'களாகவே வாழ்கிறார்கள்.

'கொல்லான் புலால்
மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்'
என்று தெய்வப் புலவர் கூறியுள்ளார். அதனைப் படித்துவிட்டு நாம் தவறிழைக்கலாமா? பசுமாடு தெய்வமாகப் போற்றப்பட வேண்டியது. 'கோமாதா எங்கள் குலமாதா' என்று வழிபடும் பசுக்கூட்டத்தை வதைத்து வயிறு புடைக்க உண்ணுதல் தகாத செயல். அது முற்றாக விலக்கப்படல் வேண்டும்.

'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' என்று ஞான சம்பந்தப் பெருமான் பாடியுள்ளமையை நாம் மறக்கலாமா? ஆகவே சைவப்பாரம்பரியத்தைப் பேணி நாவலரவர்களால் கண்ணுங் கருத்துமாய்க் காக்கப்பட்ட நமது பண்பாட்டைக் காற்றில் பறக்க நாமே அனுமதிக்கலாமா?

எமது அன்றாட வாழ்வில் சைவசமய அனுட்டானங்களையும் விதிமுறைகளையும் அனுசரிக்க வேண்டியது நமது தலையாய கடனாகும். நமது முன்னோர்களும் ஆன்றோர்களும் ஏதோ ஒரு காரணத்தை முன்வைத்தே சம்பிரதாயங்களையும் சைவப் பாரம்பரியங்களையும் ஏற்படுத்திச் சென்றிருக்கின்றார்கள் என்பதை நாம் கருத்திற் கொள்ளவேண்டும்.

'நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா; நித்தலுமெம்பிரானுடைய கோயில் புக்கு' என்று பாடிய நாவுக்கரசர் பெருமான் கூட இதனையே வலியுறுத்துகின்றார். இறைவனது பொற்பாதக் கமலங்களைச் சென்றடைய வேண்டுமேயானால் தொண்டு செய்வதே சிறந்த பணி என்பது அவர் கூற்று.

அவ்வாறு தொண்டு செய்வதற்கு இந்த மானிடப் பிறவியே உகந்ததாகும். 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே' என்றவாறு நாம் திருப்பணிகள் செய்வதற்கு இந்த மானிட சரீரம் இன்றியமையாதது.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி; ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பதான அந்த 'நமசிவாய' என்ற திருவைந்தெழுத்தை ஓதி நற்கதி அடையலாம். அந்த திருவைந்தெழுத்தின் மகிமை சொல்லில் அடங்காது.

'நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' என்பதில் எவ்வளவு ஆழ்ந்த கருத்துப் பொதிந்திருக்கிறது என்பது உள்ளுந்தோறும் உவகை தருவதாகும்.

எனவே, பிறவிப்பிணி தீர்க்கும் மருந்தான இறை தொண்டினைப் புரிந்து வாழ்வில் நற்கதி அடைவோமாக.

*

## வன்னிப் பிரதேசத்தில் 70 ஆயிரம் மாணவரின் கல்வி நிலை பாதிப்பு!

வவுனியா, பெப். 18

வன்னியில் இராணுவ நடவடிக்கைகளினால் 70 ஆயிரத்து 500 மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்வு, வறுமை நிலை காரணமாகப் பாடசாலைக்கு செல்ல முடியாத மாணவர்கள் மத்தியில் உளவியல் ரீதியான பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 27 ஆயிரம் மாணவர்களும் —

துணுக்காய் வலயத்தில் 9 ஆயிரம் மாணவர்களும் —

மடு வலயத்தில் 8 ஆயிரத்து 500 மாணவர்களும் —

கிளிநொச்சி வலயத்தில் 26 ஆயிரம் மாணவர்களும் —

பாதிக்கப்பட்டுள்ளதாக அண்மையில் அங்கு எடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

வன்னியில் மண்ணெண்ணெய்த்தட்டுப்பாடு காரணமாக இரவு நேரத்தில் குப்பி விளக்கிலும் படிக்க முடியாத நிலையில் மாணவர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-5)

## இளைஞர் கழகச் சம்மேளனம் தீவுப் பகுதியில் நிறுவப்பட்டது

தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்களின் சம்மேளனம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அப்பகுதி இளைஞர் சேவை அலுவலர் தலைமையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் சம்மேளனத்தின் தலைவராக அல்லைப்பிட்டி அறிவொளிஇளைஞர் கழகத் தலைவர் ப. திருமாறன், செயலாளராக வேலணை தமிழோசை இளைஞர் கழகத் தலைவர் செ. செந்தூரன், பொருளாளராக வேலணை தமிழோசை இளைஞர் கழக அங்கத்தவர் செல்வி இ. வனஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சம்மேளனத்திற்கென ஐந்து பேர் கொண்ட ஆலோசனைக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

இக் குழுவில் பிரதேச செயலர் செ. இரத்தினம் தலைமையில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன். விளையாட்டு அலுவலர் ஆர். சுதாகரன், புங்குடுதீவு சிவன்கோயில் குருக்கள் பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் மற்றும் சாட்டி மாதா ஆலய பங்குத்தந்தை அருட்திரு. யோ. யோ. மவ்லிஸ் அடிகளார் ஆகியோர் அடங்குவர். (ஐ-167)

### நாளை

மாசி 7

சனிக்கிழமை

திதி: பூரணை

முன்னிரவு 10.38 வரை.

நட்சத்திரம்: ஆயிலியம்

பிற்பகல் 11.20 வரை.

மாசி மக பூரணை விரதம்

சுபநேரம்: 3.32—5.02

ராகுகாலம்: 9.32—11.02

(பகலுக்கும், இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

உலகில் உயிரோடு வாழ்வதில் மட்டும் வாழ்க்கையில்லை. உயரிய கொள்கைகளுக்காக மடிவதிலும் உள்ளது.

- அல்பெயர்

## ஆள்கள் காணாமல் போதல் வவுனியாவில் அதிகரிப்பு

வவுனியா, பெப். 18

வவுனியாவில் கடந்த ஒன்றரை மாத காலத்தில் 34 பேர் காணாமல்போயிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனவரியில் 29 பேரும், பெப்ரவரி 15 ஆம் திகதி வரை 15 பேரும் காணாமல் போய் இருப்பதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

காணாமல் போனவர்களில் பலர் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதிலும் வவுனியா இறம்பைக் குளத்தைச் சேர்ந்த மகேந்திரன் கஜமுகன் (வயது 19) என்பவர் பற்றிய தகவலைப் பெற முடியாதுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா இணைப்பதிகாரி எஸ். சிறீதரன் தெரிவித்தார். (ஐ 5-164)

### தேடுதல்

கொக்குவில் கிழக்கு, பிரம்படி, நாச்சிமார் கோயிலடி, கலட்டிப் பகுதிகள் நேற்று முன்தினம் அதிகாலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன.

காலையில் வீடு வீடாகச் சென்ற படையினர் சந்தேகத்திற்கிடமானவர்கள் என்று கருதப்பட்டவர்களை நாச்சிமார் கோயிலடிக்கு அழைத்துச் சென்று விசாரித்தனர். (இ-86)

## தென்மராட்சிமேற்கு கூ. சங்கத்தின் 2கிளைகளில் பொருள்கள் சூறை

### கட்டடங்களும் சேதம்

அரியாலை, பெப். 18

தென்மராட்சி, மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டு கிளைகள் அண்மையில் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. கிளைகளின் கட்டடங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

சங்கத்தின் கைதடி, நாவற்குழி தெற்கு பத்தாம் இலக்க கிளை உடைக்கப்பட்டு சுமார் 53 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

மறவன்புலோ எட்டாம் இலக்கக் கிளையில் இருந்து ஒரு லட்சத்து 11 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

இதனால் சங்கத்திற்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகச் சங்கத்தின் தலைவர் சி. சுப்பிரமணியம் தெரிவித்தார். (ஐ-17)

## யோகர்சுவாமி ஆயிலிய பூசை

கொழும்புத்துறை, பெப். 18

கொழும்புத்துறை யோகர் சுவாமியின் சமாதிக்கோயிலில் ஆயிலிய நட்சத்திர தின பூசை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்குநடைபெறும். (ஐ-30)

## தவறவிட்ட கைக்கடிகாரம்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ். ஆஸ்பத்திரியில் கண்டெடுக்கப்பட்ட பெண்கள் கைக்கடிகாரம் ஒன்று பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

தவறவிட்டோர் பணிப்பாளருடன் அல்லது நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## நெடுந்தீவுக்கு அதிகாரிகள் குழு

நெடுந்தீவு, பெப். 18

யாழ்ப்பாணம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். கிருஷ்ணசாமி தலைமையில் திணைக்கள அதிகாரிகளைக்கொண்ட குழு ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நெடுந்திவுக்கு விஜயம் செய்யவுள்ளது. (ஐ-111)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

எம். ஆர். சந்திரகோபன் ஆகிய எனது விமான ரிக்கெட் சுன்னாகத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல - 11, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும் சன்மானம் வழங்கப்படும்.
(73790)

யோகராஜா பார்த்தீபன் என்பவரது விசேட அடையாள அட்டையும், (0905026634) கொக்குவில் இந்துக்கல்லூரி பாடசாலை அடையாள அட்டையும் (16894) கொக்குவிலுக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 6, சென்ற், ஆன்ஸ் லேன், மானிப்பாய் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்
(73772)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Hero Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு; தொடர்பு: இல. 180, மூத்த விநாயகர் வீதி, நல்லூர். தொலைபேசி இல. 021-2099
(71762)

பருத்தித்துறை பிரதான வீதியில் சிவன் கோயிலுக்கு மிக அருகில் ஒரு பரப்பு நான்கு குழி விஸ்தீரணமுள்ள காணி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் மேற்படி விலாசத்தில் வசிக்கும். ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு பொ. சிவசெந்திநாதனுடன் தொடர்பு கொள்ளவும். விலை நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.
(சி/11061)

நல்ல நிலையில் உள்ள குளிர்சாதனப் பெட்டி, மின் மோட்டர் போன்ற வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம்: 10.00 — 6.00 P.m சனி, ஞாயிறு (19/02, 20 / 02) விலாசம் 15, (39) சிவப்பிரகாசம் றோட், யாழ்ப்பாணம்.
(73630)

## தேவை

கடைக்குரிய கண்ணாடி அலுமாரிகள் (மரத்தில் அல்லது அலுமினியம்), கவுண்டர் மேசை, விறாக்கைகள் ஆகியன தேவை. தொடர்பு: சு. தவலிங்கம், சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. T.P 2975, (73746)

## மணப் பெண் தேவை

கனடா, U.K, ஜேர்மனி, சுவீடன், நோர்வே ஆகிய நாடுகளுக்கு ஸ்பொன்சரில் அழைக்கப்படும். படித்த அழகிய பெண்கள் தேவை. திங்கள் மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் மடத்தில் சந்திக்கலாம். V. S. S. குருக்கள். ((73760)

## புதுவருஷப் பலன்

எங்கும் விற்பனையாகின்றன. 12 இராசிகளின் பலாபலன்கள். வேலணை சோதிடர் V. A. சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். உங்கள் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் சந்தித்துப் பாருங்கள். [73652]

## ஜோதிடம்

பொய்யாமொழி ஜோதிடம் தொழில் பிரச்சினை, கல்வித் தடை, விவாகத்தடை தீர ஆலோசனை வழங்கப்படும், பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சாதகத்துடன் வரவும். ஞாயிற்றுக் கிழமைகளில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் மடத்திலும். சனி, செவ்வாய்க் கிழமைகளில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவிலடி, 140, பருத்தித்துறை வீதி, நல்லூரிலும் சந்திக்கலாம்.
(73759)

## கல்வி

இணைந்த கணிதம் பாடத்திற்குரிய ''நிகழ்தகவு'' பாடநூல் வெளிவந்துள்ளது. ஆசிரியர்: சி. துரையப்பா, பிரபல்யமான புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
(73680)

# இதய அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திரு. ஞானதிருக்கேதீஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

## இளையதம்பி ஞானசேகரம்

அவர்கள் 15—02—2000 அன்று சிவபதமெய்தியதையிட்டு ஆறாத்துயரில் மூழ்கி இருக்கும் உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெறவும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், துணையாளணியினர்கள்.

யாழ். மத்திய கல்லூரி. (73788)

யாழ். பல்கலைக்கழக
அனைத்து விடுதி மாணவர் ஒன்றிய
வளர்ச்சி நிதிக்கான

# மாபெரும் கலை நிகழ்வு

தே. தேவானந்தின் நெறியாள்கையில்
பல்கலைக்கழக மாணவர்கள் பங்குபற்றும்

## 'அக்கினிப் பெருமூச்சு'

நாள்: 20-02-2000 (ஞாயிற்றுக்கிழமை)
இடம்: 1. யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
(நேரம்: காலை 9. 00 மணி)
2. யா/ வட இந்து மகளிர் கல்லூரி
(நேரம்: மாலை 2. 30 மணி)
[புதிய நேரப்படி]

★ குறைந்தளவான நுழைவுச்சீட்டுக்களே எம்வசமுள்ளன.

அனைத்து விடுதி மாணவர் ஒன்றியம்

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம். [73778]

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 15 — 12 — 1939
இறப்பு: 18 — 02 — 1999

## சுப்பு ஐயாத்துரை
(டோமினிக)

ஓராண்டு சென்றாலும்
ஆறவில்லை அப்பா எங்கள் துயர்!
பக்குவமாய்ப் பேணி வளர்த்து
கண் போல் எம்மைக் காத்து
கண்ணீருடன் தவிக்க விட்டு
மாயமாய் மறைந்து விட்டீர்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

267, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (73784)

# நிவாரணத்துக்கு கடைசி நாள்

அரியாலை, பெப். 18
யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் ஊடாக வழங்கப்பட்டு வரும் 83 ஆவது தொடர் 'ஏ' 'பி' புள்ளி முத்திரைக்கான நிவாரணப் பொருள்களை இன்று வெள்ளிக்கிழமைக்கு முன்பாகப் பெற்றுக்கொள்ளுமாறு சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

# பிரத்தியேக வகுப்புகள்

சித்திரம்
தரம் - 9,10,11, & A/L
SAT, SUN 11 00 A.m
Mr. T. துஷ்யந்தன்

## I. B. S.
## கல்வி நிறுவனம்

சுண்டுக்குளி
(73786)

# வீதிகளைப் பாவனைக்கு திறக்கக் கோரிக்கை

அச்சுவேலி, பெப். 18
அச்சுவேலி கிழக்குப்பகுதியில் உள்ள தோட்ட நிலங்களுக்குச் செல்லும் நாச்சிமார் கோயில் வீதி, ஆவரங்கால் மாட்டொழுங்கை வீதி இரண்டையும் பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து விடுமாறு அச்சுவேலி தெற்கு விவசாயிகள் சம்மேளனம் கோரியுள்ளது.

நாச்சிமார் கோயில் வீதி, முற்றாகவும் ஆவரங்கால் மாட்டொழுங்கை வீதியில் ஒரு பகுதியும் பாவனைக்கு மூடப்பட்டுள்ளன.

விவசாயிகள், மீன்பிடித் தொழிலாளர்கள் அதிகமாகப் பயன் படுத்தும் இரண்டு வீதிகளையும் மூடியுள்ளதால் பெரும் சிரமங்களை அனுபவிப்பதாக விவசாயிகள் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.
(ஐ-11)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

▶▶▶▶▶▶▼◀◀◀◀◀◀◀

சிற்பகலாநிதி அராலியூர் விஸ்வப்பிரம்மஸ்ரீ

## சின்னத்தம்பி அமரசிங்கம்

அவர்களது கலைப் பணியைப் போற்றி ஈழத்து நாதஸ்வரக் கலைஞர்கள் எடுக்கும் பாராட்டு விழாவிற்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
25 ஆண்டுகளாக இடைவிடாது தனது கலைத்திறனாலும், ஸ்ரீ காளிகா தேவியின் தெய்வ ஆசியாலும் நாதஸ்வர இசைக் கருவியை முதன்முதலாக ஈழத்தில் தயாரித்த பெருமைக்குரிய இந்தச் சிற்பக் கலைஞருக்கு எமது இசைக் கலைஞர்கள் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இசை வேளாளர் சங்கம்
யாழ்ப்பாணம்.
[73782]

சிற்பகலாநிதி

# சி. அமரசிங்கம்

## பாராட்டு விழாச் சிறப்பு மலர்

## நாதஸ்வரத்தை ...

[3 ஆம் பக்கத் தொடர்]

பெறும் திருவிழாக்கள், பெருவிழாக்கள், மங்கள வைபவங்கள் போன்ற நற்கருமங்களில் எல்லாம் அமரசிங்கம் அவர்கள் வடித்த நாதஸ்வரத்தின் நாத இசையே காற்றுடன் கலந்து கலாரசிகர்களைப் பரவசப்படுத்திக் கொண்டிருக்கிறது. அவரது நன்மதிப்பைப் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது.

சிற்பக் கலைஞர் அமரசிங்கம், தமது சிற்பக் கலையுடன் மட்டும் நிற்காது, நாதஸ்வரக் கலைஞர்களுக்காகப் பெரும் முயற்சி எடுத்து, அயராத ஊக்கமும், தளராத மனமும் கொண்டு தாம் எதிர்கொண்ட கஷ்டங்கள் பலவற்றையும் தாண்டி நிறைவான வெற்றியுடன் நாதஸ்வரக் கருவியை எமக்காக உருவாக்கியமைக்காக எமது நன்றிகளைத் தெரிவிக்கிறோம். அத்தோடு நின்றுவிடாது, தொடர்ந்தும் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்த அமரசிங்கம் அவர்களின் பெயரையும், புகழையும் பாரினில்—கலை உலகினில் — நிலைபெறச் செய்வதே நாம் செய்யக்கூடிய கைம்மாறாகும்.

அன்பன் அமரசிங்கம் பல்லாண்டு காலத்துக்குச் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும். மேன் மேலும் அவர் சேவை பெருகவேண்டும் என நல்லூர் முருகனை வேண்டுகின்றேன்.

வாழ்க கலை! வளர்க கலைத்தொண்டு!!

## நானூறு ...

(3 ஆம் பக்கத் தொடர்)

நுட்பத்தினாலும் சில உறவினர் குறிப்பாக மைத்துனரும் இளைஞருமான பி. ராதாவின் இடையறாத ஊக்கத்தினாலும், நாதஸ்வரக்கலைஞர்களின் உற்சாகத்தினாலும் இடைவிடாது தொடர்ந்து செயற்பட்டு முழுமையான வெற்றி பெற்றார். இவ் வாத்தியத்தினை வெற்றிகரமாக உருவாக்கியமை இவரின் சிறந்த சாதனையாகும்.

இப் பெரும் முயற்சியிலே [illegible] இடையறாத ஊக்கமளித்து வந்த பிரபல நாதஸ்வரக்கலைஞர்களிலே மேற்குறிப்பிட்டவர்களை விட என் கே. பத்மநாதன், கே. ஆர். சுந்தரமூர்த்தி மு. வி. கே. பஞ்சாபிகேசன், கானமூர்த்தி, காலம் சென்ற நம்பிராசா, அளவெட்டி எம். பி. பாலகிருஷ்ணன், காலம் சென்ற என். ஆர். கோவிந்தசாமி, நல்லூர் பிச்சையப்பா பி. ரஜீவன், இணுவில் செல்வம் போன்றோரை அவர் நன்றியுடன் நினைவு கூருகிறார்.

தாம் அரிதிலே மிக முயன்று உருவாக்கிய இக் கலைத்திறனை வேறு சிலருக்கும் புகட்டி வருகிறார். இவரின் மாணவர்களில் இ. கணேசலிங்கம் போன்றோரைக் குறிப்பிடலாம். எமது நாட்டிலே இக்கலை ஆக்கத்தினைத் தாமே உருவாக்கி வளர்த்து வருவதோடு, தமக்கே உரிய இக் கலை மரபினைத் தொடரும் வகையில் செயலாற்றுமிவர் பாராட்டிற்குரியவர்.

இன்று வரை இவர் ஏறத்தாழ நானூறு நாதஸ்வரங்கள் செய்து எம் நாட்டு நாதஸ்வரக் கலைஞர்களுக்குப் பேருதவிபுரிந்து வருகிறார். இவரின் நாதஸ்வரங்கள் இலங்கையில் மட்டுமன்றிக் கடல் கடந்து இங்கிலாந்து, ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், கனடா, ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர், முதலிய நாடுகளில் வாழும் நாதஸ்வரக் கலைஞர்களாலும் பயன்படுத்தப்படுகின்றன. ★

ஓம் சக்தி

வட்டுக்கோட்டை - சங்கரத்தை - பிட்டியம்பதி

## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

## மாசிமக உற்சவப் பெருவிழா

அம்பிகை அடியார்களே !

நிகழும் பிரமாதி வருஷம் மாசி மீ 7 ஆம் நாள் மக நட்சத்திரம் (19 - 02 - 2000) உற்சவப் பெருவிழா சனிக்கிழமை நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

### நிகழ்ச்சிகள்

1. காலை 9 மணி முதல் விசேட அபிஷேகம், பூசைகள்.
2. நாதஸ்வர இசைக் கச்சேரி.

ஈழத்தின் பிரபல நாதஸ்வர வித்துவான்கள்

திரு. வி. கே. கானமூர்த்தி குழுவினர்

திரு. வி. கே. பஞ்சமூர்த்தி – குமரேஸ்

திரு. எஸ். ஜெயராமன்

நண்பகல் 12. 00 மணி முதல்

### கலைஞர் கௌரவம்

நாதஸ்வர இளங்கலைஞர்

திரு. வி. கே. பஞ்சமூர்த்தி – குமரேஸ்

தலைவர்: திரு. சி. சபாநாதன் அவர்கள்

பொன்னாடை போர்த்தல்

ஆலய பிரதமகுரு

ஆ. சிவகெங்காதரக் குருக்கள்

தங்கப் பதக்கம் சூட்டல்

திரு. இ. தெய்வமனோகரன்
(இலங்கை வங்கி, சுன்னாகம்)

ஆசியுரை

சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
(கதிரமலை சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்)

வாழ்த்துரை

1. சங்கீதபூஷணம் திரு.சு. கணபதிப்பிள்ளை
2. திரு. வி. சிவஞானபோதம் (அதிபர், வட்டு. மத்திய கல்லூரி)
3. திரு. எஸ். சந்திரசேகரம் (அதிபர், கணேச வித்தியாலயம், சித்தன்கேணி)
4. திரு. சி. கேசவன் (ஆசிரியர்)
5. திரு. நா. அகிலன் (வட்டு. கண்ணகை அம்மன் தொண்டர் சபை)

அம்பாள் அலங்கரிக்கப்பட்ட விசேட சாத்துபடியுடன் தாமரைப் பூ வாகனத்தில் எழுந்தருளி வரும் காட்சியும் இடம்பெறும்.

இங்ஙனம்
– மாசிமக உபயகாரர்

(சி/11041)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 01 — 1920

மறைவு: 21 — 02 — 1997

## அமரர் க. இ. ஆறுமுகம்

திதி: 18 – 02 – 2000

உருண்டோடிய வருடங்கள் மூன்றாகியும்
உருத்தெரியா உன் நினைவு
உருக்குதையா எம் மனத்தை!

– குடும்பத்தினர்

பண்ணாகம்,
சுழிபுரம். (73690)

# துப்பாக்கி முனையில் கடத்தப்பட்ட இளைஞன் கைது என அறிவிப்பு!

## அதுவும் இரண்டு வாரங்கள் கழித்து!!

கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி துப்பாக்கி முனையில் கடத்தப்பட்ட இளைஞன் கடந்த 14 ஆம் திகதியே கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்து அதற்கான பற்றுச் சீட்டு ஒன்றைப் படையினர் நேற்று முன்தினம் உறவினர்களிடம் கையளித்துள்ளனர்.

புத்தூர் பகுதியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் கமலாகரன் (வயது 20) என்ற இளைஞனே தற்போது கைது செய்யப்பட்டதாக படையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இளைஞன்காணாமற்போனமை தொடர்பாக இவரது உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டில்—

ஜனவரி 29 ஆம் திகதி மேற்படி இளைஞன் நீர்வேலி இராணுவத்தினரால் முகாமுக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் மறுநாள் சனிக்கிழமை அச்செழு இராணுவ முகாமுக்குச் செல்லுமாறு கூறி விடுதலை செய்யப்பட்டான் எனவும் —

எனினும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட அன்றே இரவு இனந்தெரியாத துப்பாக்கி நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போனான் எனவும்—

—தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேசமயம்— இந்த இளைஞனைக் கடந்த 14 ஆம் திகதியே தாம் கைது செய்ததாகத் தெரிவித்து சாவகச்சேரி முகாம் படையினர் இவரது கைதுக்கான பற்றுச்சீட்டை உறவினர்களிடம் தற்போது வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் சாவகச்சேரிப் படையினரால் கைது செய்யப்பட்ட மேற்படி இளைஞன் நேற்று முன்தினம் காங்கேசன்துறை தடைமுகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலீஸாரால் மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்துக்கு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. (உ-7-9)

## மெய்வல்லுநர் போட்டிகள்

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் க. செல்வக்குமாரன் தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் முதன்மை விருந்தினராகவும் வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. பாலசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (உ-152)

★ ★ ★

கைதடி கலைவாணி வித்தியாலய பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி பாடசாலை அதிபர் திரு. ப. செல்லத்துரை தலைமையில் இடம்பெறும்.

தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. குமாரசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-133)

★ ★ ★

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலய ஆரம்ப பிரிவு விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1-45 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் செல்வி அ. கந்தையா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் கலந்துகொள்வார். வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களைத் திருவாட்டி. அன்னலட்சுமி பாலசிங்கம் வழங்குவார். (உ-69)

★ ★ ★

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு அதிபர் அ. நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக வலிகாமம் தெற்கு பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த. தேவராஜன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் வி. பாலசிங்கம் கலந்துகொள்வார்.

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்

## "றாட்"

## 18ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக்கூட்டமும்

காலம்: 19 . 02 . 2000 சனிக்கிழமை

நேரம்: காலை 10.00 மணி (பழைய நேரம்)

இடம்: கில்னர் மண்டபம்
426, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்

வரவேற்புரையும் ஆண்டறிக்கையும்
திரு. சே. செல்வக்குமார் (தலைவர்)

சென்ற வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கை அங்கிகரித்தல்

கணக்கு அறிக்கை (1999) அங்கீகரித்தல்

முன்னாள் றாட் தலைவர் உரை:
திரு. க. சண்முகநாதன்

றாட் போஷகர் உரை:
திரு. சி. வேல்முருகுப்பிள்ளை (பிரதேச செயலர், நல்லூர்)

பிரதம விருந்தினர் உரை:
திரு. க. சண்முகநாதன் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.)

சிறப்பு விருந்தினர்கள் உரை:
திரு. சி. வி. கந்தையா சிவஞானம் (தலைவர், யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம்)
திரு. கே. கோபாலகிருஷ்ணன் M.A. (முன்னாள் அதிபர், நவீல்ட் பாடசாலை, கைதடி.)
திரு. T. இராஜபாலன் (J/101, கிராம அலுவலர், நீராவியடி.)

கலை நிகழ்ச்சிகள்

நன்றியுரை: செயலாளர்

உத்தியோகத்தர் தெரிவு

✱ அங்கத்தவர்களுக்கு மதிய போசனம் வழங்கப்படும்.

எமது அழைப்பை ஏற்று விழா நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்,

நன்றி

க. சுரேந்திரநாதன் (செயலாளர்)

(73753)

## 160 ஆவது நாள் நினைவஞ்சலி

பிறப்பு 08-04-1975



இறப்பு 12-09-1999

## அமரர் பொன்னம்பலம் தவலோகநாதன் (வரதன்)

காலங்களோடி மறையும் — நீயோ
காலத்தால் மறையாது என்றென்றும் வாழ்வீர்.

பொன்னம்பலமும்
குடும்பத்தினரும் உறவினர்களும்
(முதலாம் வட்டாரம், நெடுந்தீவு)

இல. 100, 118,
ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி. (சி/11029)

# சிவராத்திரியன்று யுத்த நிறுத்தம் செய்ய இருதரப்பிடமும் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 18 மகா சிவராத்திரி தினமான அடுத்த மாதம் 4 ஆம் திகதியைத் தெய்வீக நாளாகப் பேணி அன்றைய தினம் யுத்தத்தைத் தவிர்க்குமாறு யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை அரசாங்கத்திடமும் விடுதலைப் புலிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாகப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்த நாட்டில் நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அனைவரும் ஆத்மீக வழியில் நின்று அகவுணர்வை வளர்த்து, உண்மைச் சமாதானத்தை ஏற்படுத்துவோமாக!

எமக்குள்ளேயுள்ள வேறுபாடுகளைக் களைந்துவிட்டுத் தெய்வீக உணர்வை மேம்படுத்துவோமாக. இந்த உயர்நிலையைப் பெறுவதற்கு நாம் எம்மைத் தயார்ப்படுத்துவோமாக!

உலக இந்துக்களால் மிகப் பக்திபூர்வமாக அனுட்டிக்கப்படும் மகாசிவராத்திரி தினத்தில் அனைவரும் பகைமையை மறந்து இத்தகைய உயர்ந்த பிரதிக்ஞையை எடுத்துக் கொள்வோமாக!

இந்தப் புனிதமான நாளான 04-03-2000 ஆம்திகதிய அன்றைய தினத்தை இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் யுத்தத்தைத் தவிர்த்துத் தெய்வீக நாளாகப் பேணிக்கொள்ளுமாறு மிகுந்த ஆராமையோடு பக்திபூர்வமாகச் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் கேட்டுக் கொள்கின்றோம். இந்த மாபெரும் அர்ப்பணத்தில் இருந்து நாம் அனைவரும் இதுவரை அனுபவித்து வந்த துன்பங்களில் இருந்து விடுபட எமக்கு வழிகிட்டும் என்பதை மனதார நம்புவோமாக!

இந்தத் தெய்வீக அர்ப்பணத்தில் இருந்து எம்மிடையே மிகப்பெரிய மகிழ்ச்சிமிக்க சமாதான ஒளி எமக்குக் கிடைக்கும். சிவபிரான் காத்துநிற்கின்றான் என்ற உண்மையை உணர்ந்துகொள்வோமாக!

இந்தப் புனிதமான நாளில் ஆலயங்களில் விஷேட பூஜைகளையும் வழிபாடுகளையும் சிறப்பாக நடத்துவதற்கு ஊரடங்குச் சட்டத்தை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

மக்கள் அனைவரும் திருக்கேதீஸ்வர, திருக்கோணேஸ்வரப் பதிகங்களையும், ஏனைய பக்திபூர்வமான பனுவல்களையும் ஓதுமாறும் சிறப்பாக அந்தணர்கள் அன்றைய தினம் ஸ்ரீருத்ர பாராயணத்தை மேற்கொள்ளுமாறும் மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

இப் புனித பணிவன்பான தெய்வீகம் நிறைந்த வேண்டுகோளைச் சிவபிரானின் திருவருளால் நிறைவேற்றப் பிரார்த்திக்கின்றோம்.
—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## 50 தமிழர்கள் கைது

கொழும்பு, பெப். 18 கொழும்பு கொட்டாஞ்சேனைப்பகுதியில் பொலீஸாரும் இராணுவத்தினரும் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய சோதனை நடவடிக்கையின் போது 50 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 20 பேர் பெண்களாவர். இவர்கள் கொட்டாஞ்சேனை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5)

## நீர் வழங்கும் திட்டம் விஸ்தரிப்பு

நெடுந்தீவு, பெப். 18 நெடுந்தீவு மேற்கு காராப்பிட்டி குடிதண்ணீர் விநியோகத் திட்டம் புதுக்கடைச் சந்திவரை விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

இதற்கென பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒரு லட்சம் ரூபாவை யாழ். மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா பிரதேச சபைக்கு வழங்கியுள்ளார்.

(ஐ-111)

---

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

எம் இனிய நண்பன்
ஞான. திருக்கேதீஸ்வரன்
(ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி)
அவர்களின் தந்தையார்

### இளையதம்பி ஞானசேகரம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் மன அமைதி பெறவும், இறையடியெய்திய பெரியவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நண்பர்கள்
ச. வாமதேவன், இரா. செல்வவடிவேல்

(73777)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### பொன்னையா நடராசா

தோற்றம் 23-06-1911 — மறைவு 20-01-2000

தந்தையாய், குருவாய், தலைவனாய் எம்மை வழி நடத்தி சிவத்தோடு கலந்து விட்ட சிவனே

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

20-01-2000 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தந்தையாரின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டும், கடிதம், தொலைபேசி மூலம் எமது துயரத்தில் பங்கு கொண்டு, எமக்கு ஆறுதலும், அனுதாபங்களும் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றிகள்.

எமது இல்லத்தில் நாளை (19-02-2000) சனிக்கிழமை முற்பகல் 10. 00 மணிக்கு நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும, ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கெருடாவில்,
தொண்டமனாறு.

(73775)

---

அளவெட்டி வடக்கு

## தவளகிரி முத்துமாரி அம்மன் இலட்சார்ச்சனை பூர்த்தியும் நவோத்திர சங்காபிஷேகமும்

அளவெட்டி வடக்கு தவளகிரி முத்துமாரி அம்மன் ஆலய இலட்சார்ச்சனைப் பூர்த்தியும் நவோத்திர சகஸ்ர மகா சங்காபிஷேகமும் மாசி மகதீர்த்தோற்சவமும் நாளை 19 — 02 — 2000 (சனிக்கிழமை) நடைபெறும். என்பதனை அறியத்தருகின்றோம்.

அன்று பகல் அன்னதானம் வழங்கப்படும்.

ஆலய பூசகர்
சொ. பசுபதிநாதன்

(சி-11063)

---

வலி.தெற்கு பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

15-02-2000-ந்திகதி நடைபெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் பின்வருமாறு:

1 ஆம் பரிசு இலக்கம் 2976
2 ஆம் பரிசு இலக்கம் 2771
3 ஆம் பரிசு இலக்கம 1667

ஆறுதல் பரிசு இலக்கங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 943 | 2254 | 843 | 1396 | 1660 |
| 1748 | 2066 | 2769 | 1070 | 1407 |

மேற்குறித்த பரிசிற்குரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்,
பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்.
உடுவில்.

(73781)

---

யாழ்ப்பாணம்

## மாநகரசபை பொதுசன நூலகம் பழைய சஞ்சிகைகள் ஏல விற்பனை

நூலகத்திலிருக்கும் பழைய சஞ்சிகைகள் யாவும் வாசகர்களிற்கு சிறு சிறு தொகுதிகளாக பகிரங்க ஏலத்தில் எதிர்வரும் 26 - 02 - 2000 சனிக்கிழமை, 27 - 02 - 2000 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாள்களும் மாநகர சபை வளவினுள் அமைந்துள்ள நல்லூர் நூலகத்தில் வைத்து காலை 9.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். ஏல விற்பனையில் சஞ்சிகைகள் கொள்வனவு செய்வோர் உடன் பணத்தைச் செலுத்தி சஞ்சிகைகளை அப்புறப்படுத்தல் வேண்டும்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
11. 02. 2000.

(சி/11062)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 10-04-1934 — ஆண்டவன் அடியில் 18-02-1999

### திருமதி யோசேப்பு றோஸ்மலர் (புஷ்பம்)

ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்.

பாசமுள்ள தாயாய்
கடமை மிக்க தலைவியாய்
சிறப்புடன் எமை வாழவைத்த தெய்வமே!
நொடிப் பொழுதில் எம்மை விட்டுச்சென்று
ஒருவருடம் ஆனாலும் — அம்மா!
உங்கள் அன்பு முகம் — உயிருள்ளவரை
எமை விட்டு அகலாது.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் பிரிவால் வாடி நிற்கும்
கணவன், பிள்ளைகள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்

மணற்காடு,
குடத்தனை.

(சி/11031)




### பாக். அணியுடனான

# டெஸ்ட் ஆட்டங்களில் அர்ஜுனா, அரவிந்த!

கொழும்பு,பெப்.18

பாகிஸ்தான் அணியுடன் எதிர் வரும் 26ஆம் திகதி இடம்பெற உள்ள டெஸ்ட் ஆட்டங்களுக்கான இலங்கை அணியில், இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கவும் அரவிந்த டி சில்வாவும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 20ஆம் திகதி பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் ஆட்டங்களில் பங்குபற்றுவதற்கு அர்ஜுன ரணதுங்க, அரவிந்த டி சில்வா, ரங்கன ஹேரத் ஆகியோர் பாகிஸ்தான் செல்ல உள்ளனர்.

இதேவேளை ஒருநாள் போட்டிகளுக்காக இலங்கை அணியில் இடம்பெற்ற முத்துமுதலிகே புஷ்பகுமார, இந்திக டி சேரம், சமர சில்வா ஆகியோர் தாயகம் திரும்ப உள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தேசிய தேர்வாளர் குழுக் கூட்டத்தை அடுத்து இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

(இ-8)

# 34 ஓட்டங்களினால் இலங்கை அணி வெற்றி!

கராச்சி,பெப்.18

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் இலங்கை அணி 34 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.


ஆட்டநாயகன் சனத்

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 263 ஓட்டங்களைப் பெற்றது. சனத்ஜெயசூரிய 65 ஓட்டங்களையும், மாவன் அத்தப்பத்து 57 ஓட்டங்களையும் விளாசினர்.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 45.1 ஓவர்களில் 229 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. யுஹானா 68 ஓட்டங்களையும், வாசீம் அக்ரம் 34 ஓட்டங்களையும் அடித்தனர்.

நேற்றைய ஆட்டத்தில் வாஸ், முரளி, விக்கிரமசிங்க, சக்லைன், சனத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக சனத் ஜெயசூரிய தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை - பாக். அணிகளுக்கு இடையிலான இறுதி ஒருநாள் ஆட்டம் நாளை சனிக்கிழமை இடம் பெறும். (இ-8)

## இன்றைய ஆட்டங்கள்

வலிகாமம் கல்விவலய சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி ஆடுகளத்தில் இடம்பெறவுள்ள வலைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 15வயதுப் பிரிவு

* பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தி. எதிர் சண்டிலிப்பாய் இ.க.
* மானிப்பாய் மகளிர் கல்லூரி எதிர் நவாலி ம.வி.

### 17வயதுப் பிரிவு

* மானிப்பாய் மகளிர் கல்லூரி எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
* சண்டிலிப்பாய் இ.க. எதிர் பண்டத்தரிப்பு இ.க.

### 19வயதுப் பிரிவு

* சண்டிலிப்பாய் இ.க. எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை. (ஐ-8-86)

## உதைபந்தாட்டம்

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

* தேவரயாளி இ.க. எதிர் வேலணை ம.ம.வி. (யாழ். இ.க. மைதானத்தில்)
* யாழ். இ.க. எதிர் மீசாலை வீக்னேஸ்வர ம.வி. (துரையப்பா விளையாட்டு மைதானத்தில்)

### 18 வயதுப் பிரிவு

* தேவரயாளி இ.க. எதிர் கைதடி முத்துக்குமாரசாமி வித்தி. (யாழ். இ.க. மைதானத்தில்)
* புனித சாள்ஸ்ம.வி. எதிர் வசாவிளான் கல்லூரி (துரையப்பா விளையாட்டு மைதானத்தில்).

## கிரிக்கெட்

பாடசாலை மட்டத்தில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டிகளில் இன்றும் நாளையும் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து விளையாடும். இந்த ஆட்டம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

## மெய்வல்லுநர் போட்டிகள்

புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை அதிபர் அருட்செல்வி ஜீ.செல்வராணி தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீடப் பீடாதிபதி மா. நடராஜசுந்தரமும் சிறப்பு விருந்தினராக யாழ். கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.இராஜகோபாலும் கௌரவ விருந்தினராகப் பங்குத் தந்தை அருட்திரு ஆர்.எம்.ஜீ. நேசநாயகமும் கலந்து கொள்வார்.

* * *

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுனர் திறனாய்வு நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல்2மணிக்கு பாடசாலை அதிபர் கு.சிவானந்தம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்விவலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ.கணேசனும் சிறப்பு விருந்தினராகச் சாவகச்சேரி, பளைப் பிரதேச சபைச்செயலர் ந.பாலச்சந்திரனும் கலந்து கொள்வர்.

* * *

மானிப்பாய்மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலைஅதிபர்திருமதிச.யோகேஸ்வரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில்வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராகவும்சண்டிலிப்பாய் க.தனபாலசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் சங்கானை, சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்ட ஆசிரிய ஆலோசகர் மு.லோகநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

* * *

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பிரதம அதிதியாக யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் சி.மகாலிங்கமும் அவரது பாரியாரான யாழ். கல்வி வலய பணிப்பாளர் திருமதி. செல்வராணி மகாலிங்கமும் கலந்து கொள்வார்கள்.

## நாட்டுக்கூத்துப் போட்டிகளில் நாளை

யாழ்ப்பாணம்,பெப்.18

பாரம்பரியகலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் நாட்டுக் கூத்துப் போட்டிகளில் 11ஆம், 12ஆம் கட்டப்போட்டிகள், நாளை சனிக்கிழமை முதல் இரண்டு தினங்களுக்குக் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் காலை 9.00 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

சனிக்கிழமை நடைபெறும் போட்டிகளில் தம்பாட்டிகாந்தி நாடகமன்றம், இளவாலை வடமயிலை நாடக மன்றம், மாதனைகாளி மகளிர் கலாலயம், பருத்தித்துறை அமரசிங்கம் குழுவினர், குடத்தனை இராமநாதன் குழுவினர், கரவெட்டி வேலாயுதம் குழுவினர், உடுப்பிட்டி இமையாணன் கலாமன்றத்தினர் ஆகியோர் பங்குபற்றும் காத்தவராயன் கூத்துகள் நடைபெறும்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் போட்டிகளில் குருநகர் சென்றோக் வான்மதி கலாலயம் வழங்கும் பிரகலாதன் நாட்டுக்கூத்து மற்றும் பளை சென்பீற்றர் கலாமன்றம் வழங்கும் ஒரு சிரசு பலியாகிறது நாட்டுக்கூத்தும் இடம்பெறும்.

முதல்நாள் நிகழ்வுகளுக்கு நல்லூர் பிரதேச செயலக செயலர் சி.வேல்முருகோன்பிள்ளையும் இரண்டாம் நாள் நிகழ்வுகளுக்கு யாழ். பிரதேசசெயலர் பா.செந்தில்நந்தனன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

பாரம்பரியக்கலைகள் மேம்பாட்டுக் கழகச்செயலாளர் செ.மெற்றாஸ் மயில் நிகழ்வுகளைத் தொகுத்து வழங்குவார். (ஐ-5)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,பெப்.18

கோப்பாய் மகாவித்தியாலய அதிபர் பதவிக்கு அதிபர் தரங்களைச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி ச.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

யாழ். வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் அதிபர்பதவி வகிக்காத இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு II தரம் I, வகுப்பு I என்பவற்றைச் சேர்ந்தவர்கள் இந்தப் பதவிக்கு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)

## விரிவுரையாளர் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.18

தேசிய கல்வி நிறுவக பயிற்சியுடன் தொடர்புடைய சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில், தேசியக் கல்வி நிறுவக பிரதிப் பணிப்பாளர் நாயகம் திருமதி கினிகேயின் அறிவுறுத்தல்களுக்கு அமைய கல்வி டிப்ளோமா பயிற்சிநெறி, தொலைக் கல்விப் பயிற்சிநெறிகள் தொடர்பான செயற்பாடுகளை மறுசீரமைப்பது பற்றி ஆராயப்படும் என்வும் -

அத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ள ஆரம்பகல்விமாணி, தமிழ் பாடநெறி மற்றும் கல்விமாணி முதலிய பயிற்சி நெறிகள் தொடர்பாகவும் பரீட்சை தொடர்பாகவும் முக்கிய விடயங்கள் பல இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)

## சாந்திகம் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,பெப்.18

சாந்திகம் நடத்தும் உளவளத் துணையினருக்கானஒருவருட காலப் பயிற்சிநெறி நாளை சனிக்கிழமை காலை ஆரம்பமாகின்றது.

டாக்டர் சிவயோகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி நெறியில் 14 பேர் பயிற்சி பெறவுள்ளனர். (இ-7)

## விஞ்ஞான தின விழா

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ். மத்திய கல்லூரி விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான தின விழாவும் மத்திய ஆய்வாளன் சஞ்சிகை வெளியீடும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (இ-5)

## பட்டமளிப்பு விழா

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கடந்த ஆண்டுக்கான பொதுப் பட்டமளிப்பு விழா இம்மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பல்கலைக்கழக ஜிம்னேசியத்தில் நடைபெறவுள்ளது.


சூரிய நமஸ்காரம்

**திறப்பு விழா**

| | |
|---|---|
| ஸ்தாபனத்தின் பெயர் | : SONY HOME (எஞ்சினியர் கடை) |
| முகவரி | : 171, நவீன சந்தை, யாழ்ப்பாணம். |
| திகதி | : இன்று 18-02-2000 |
| நேரம் | : காலை 10.00மணி |
| சிறப்பு விருந்தினரும் | |
| திறந்து வைப்பவரும் | : உயர்திரு. சிவகுரு பத்மநாதன |
| | (THE MANAGER, PEOPLE'S BANK) |

மேற்படி சுபவேளையில் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

தங்கள் நல்வரவை நாடும்,
T.RAAJARAJESWARAN
(உரிமையாளர்)

(73805)



**கண்ணீர் அஞ்சலி**

யாழ்.கல்வித்திணைக்கள உடற்கல்வி பணிப்பாளர்
திரு. த. அருணகிரிராஜா அவர்களின் தந்தையார்
**திரு.வ.தங்கராஜா** அவர்கள்

தமது முதுமையின் முதிர் கனியாகி இறையடியில் இணைந்துள்ளார். அவர் ஆத்மா சாந்தி பெற வேண்டுகின்றோம். அவர் மறைவால் வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பதோடு அத்துயரில் நாமும் இணைந்து கொள்கிறோம்.

நேரு குடும்பம்.

57. E.S பெர்ணான்டோ மாவத்தை,
கொழும்பு - 6

(C/11075)



**வாழ்த்துகின்றோம்**

சங்கரத்தை கொட்டியாம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலில் 19-02-2000 சனிக்கிழமை 12.00மணியளவில் நடைபெறும் V.K. பஞ்சமூர்த்தியின் மகன் P.குமரேஸ் அவர்களின் அரங்கேற்றம் குறித்து வட்டுக்கோட்டை வாழ் மக்கள் மகிழ்ச்சி தெரிவிப்பதுடன் பல்லாண்டு காலம் வாழவென அவரை வாழ்த்துகின்றார்கள்.

(73806) வட்டுக்கோட்டை வாழ் மக்கள்.



**வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம்**

2000 ஆண்டுக்கான புதிய நிர்வாகசபை உறுப்பினர் பட்டியல்

| | | |
|---|---|---|
| திரு.வீ.ராஜ்குமார் | - | தலைவர் |
| திரு.போல் பொனிபஸ் | - | உப - தலைவர் |
| திரு.மு.சதீஸ்குமார் | - | செயலாளர் |
| திரு.இ.சேகர் றொமிசியஸ் | - | உப - செயலாளர் |
| திரு.ந.தியாகராசா | - | பொருளாளர் |
| திரு.பொ.பாலசிங்கம் | - | நிர். - உறுப்பினர் |
| திரு.ந.குகானந்தராசா | - | நிர். - உறுப்பினர் |
| திரு.சி.வரதராசா | - | நிர். - உறுப்பினர் |
| திரு.ச.செந்தில் செல்வன் | - | நிர். - உறுப்பினர் |
| திரு.நா.மதனசேகரம் | - | போசகர் |
| திரு.மா.சிவசுப்பிரமணியம் | - | போசகர் |

யாழ்.குடாநாட்டின் சகல பகுதிகளிலும் வாடகைச் சேவையிலீடுபடும் ஆட்டோக்களை சங்கப் பதிவையும் சாரதிகள் சங்க அனுமதியையும் பெற்றுச் சேவையாற்றுமாறும், வீதி விபத்தை தவிர்த்து பொதுமக்களுக்கு சிறந்த சேவையாற்றுமாறும் மீண்டும் மீண்டும் அறியத் தருகின்றோம்.

நன்றி

(C/11071) நிர்வாகம்.



**மரண அறிவித்தல்**

**கந்தர் வாலைமுத்து**
(வல்லை வீதி, சங்கானை)

சங்கானை வல்லை வீதியைச் சேர்ந்த கந்தர் வாலைமுத்து நேற்று (17-02-2000) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மீனாட்சியின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, இரத்தினம், சின்னக்கிளி, காலஞ்சென்ற தேவி, கனகராசா (லிகிதர், ஊர்காவற்றுறை பிரதேச சபை), சிவலிங்கம், நாகேஸ்வரி, சரஸ்வதி, நாகராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பீதாம்பரம், வைத்திலிங்கம், மகாலிங்கம், யோகானந்தராசா, புவனேஸ்வரி, தனரூபி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.02.2000) வெள்ளிக்கிழமை பி.ப.1.00 மணிக்கு அவரது இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக சங்கானை கரைச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வா.கனகராசா
(மகன்)
(உரிமையாளர், வரதாஸ் கிறீம் ஹவுஸ்)
பிரதான வீதி, சங்கானை.

வல்லை வீதி,
சங்கானை.
(C/11075)

## ராஸிக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது24) என்பவர் உயிரிழந்தார்.

மண்டூரில் பாலமுனையில் வயல் வேலையை முடித்துவிட்டு இவர் தனது உறவினர்களுடன் வீடு நோக்கி வந்து கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத நபர்கள் கிரனேட் ஒன்றை வீசியதில் அவர் உயிரிழக்க உறவினர்களான 6 பேர் காயமடைந்தனர்.

## இலங்கை இன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருடன் நடத்திய பேச்சுக்களில் பல விடயங்கள் ஆராயப்பட்டன. எனினும் இலங்கையின் தற்போதைய இனநெருக்கடியே முக்கியமாக ஆராயப்பட்டது.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-க)


# 'போயா' கருத்தரங்கு

பொருள் : 'குடும்பத்தில் சுகவாழ்வு'

கருத்துரை

வழங்குபவர் : திரு. எஸ். துரைராஜா (ராஜன் யோகி)

காலம் : 19.02.2000

நேரம் : 3.30மணி (இ.நே.)

இடம : 'அகவொளி'

குடும்ப வளத்துணை நிலையம்,
131, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

'சுவைப்போம் சுகவாழ்வை'

(73741) இயக்குநர்.



## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி ~ சாவகச்சேரி

### க.பொ.த. (உயர்தர) - 1999

### மனமார வாழ்த்துகின்றோம்

| | | | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|
| **(அ)** | **கணிதம்** | | |
| 1. | த.தர்மினி | 4 A | 366 * |
| 2. | இ.சிவராமச்சந்திரன் | 4A | 355 * |
| 3. | சி.அரியகுணசிங்கம் | 4A | 327 |
| 4. | கு.முரளி | 3A B | 312 |
| 5. | செ.ஜெயராஜன் | 3A C | 306 |
| 6. | பா.மதனரூபன் | 2A 2B | 299 |
| 7. | க.கஜேந்திரன் | 3A B | 291 |
| 8. | வீ.இராஜலிங்கம் | 2A 2C | 286 |
| 9. | க.சிவகுமாரு | A B 2C | 278 |
| 10. | வீ.மாணிக்கராசன் | A B 2C | 277 |
| 11. | ச.யேபாலன் | A B 2C | 270 |
| 12. | க.ஐங்கரன் | A B 2C | 267 |
| **(ஆ)** | **உயிரியல்** | | |
| 1. | பா.ஜெகமாலினி | A 3B | 296 |
| 2. | க.சகீத்தா | 4 B | 279 |
| 3. | வே.தபோதினி | 3B C | 264 |
| 4. | இ.ஞானராஜ் | B 3C | 256 |
| 5. | ந.நந்தகோபன் | B 3C | 254 |
| **(இ)** | **வர்த்தகம்** | | |
| 1. | க.சுபாஸ்கரன் | 3A C | 323 |
| 2. | சி.வரதராஜன் | 4A | 315 |
| 3. | கி.சதீசன் | 4A | 309 |
| 4. | ச.மயூரன் | 3A C | 307 |
| 5. | க.குமரன் | 3A C | 301 |
| 6. | கு.மன்மதராஜன் | 3A C | 300 |
| 7. | ந.சேந்தன் | 3A B | 298 |
| 8. | சி.சுபாஸ்கரன் | 3A B | 298 |
| 9. | கு.மகிந்தன் | 2A 2B | 295 |
| 10. | ச.கமலினி | 2A 2B | 291 |
| 11. | தி.கோசலா | 2A 2B | 290 |
| 12. | தி.கலைவாணி | 2A B C | 286 |
| 13. | செ.மதிவதனன் | A 2B C | 286 |
| 14. | ச.தீபா | 2A B C | 283 |
| 15. | க.சஞ்சியா | 2A B C | 282 |
| 16. | தி.ராகினி | 3A S | 281 |
| 17. | ந.பாருமதி | 2A 2C | 276 |
| 18. | க.கஜேந்திரன் | 3A S | 275 |
| 19. | க.கஜேந்திரன் | A 2B C | 271 |
| 20. | இ.திலீபன் | 2A 2C | 270 |
| 21. | அ.சுதர்ஜினி | 2A B C | 269 |
| 22. | பு.குகநாதன் | 2A 2C | 269 |
| 23. | ப.பிறேமலதா | 2A 2C | 268 |
| **(ஈ)** | **கலை** | | |
| 1. | அ.சியாமளா | 3A B | 301 |
| 2. | தெ. சுகந்தினி | 4A | 300 |
| 3. | த.கீதாலக்சுமி | 3A B | 299 |
| 4. | வே.சிவரூபி | 3A B | 297 |
| 5. | நா.புஷ்பா | 2A 2B | 296 |
| 6. | மு.ஜெயவனிதா | 2A 2B | 288 |
| 7. | சி.கிவபாலினி | 2A B C | 285 |
| 8. | த.தர்சனா | A 3B | 284 |
| 9. | செ.ஸோகிதா | A 2B C | 282 |
| 10. | இ.ராதிகா | 2A B C | 279 |
| 11. | பே.சிறீகாந்தன் | 2A 2B | 278 |
| 12. | வே. தயாநிதி | A 3B | 278 |
| 13. | மு.சுரேந்திரன் | A 2B C | 277 |
| 14. | த.பிருந்தாவனிதை | A 2B C | 277 |
| 15. | சு.பிரியா | 2A B C | 274 |
| 16. | மு.யமுனா | A 2B C | 274 |
| 17. | க.யசோ | A 2B C | 271 |
| 18. | அ.ரோகினி | A 2B C | 268 |

** கணிதப் பிரிவில் செல்வி த.தர்மினி, செல்வன் இ.சிவராமச்சந்திரன் ஆகியோர் அகில இலங்கை மட்டத்தில் இரண்டாம், ஏழாம் இடங்களைப் பெற்றனர். இவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

மேற்படி பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மாணவர்களையும், பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்ற 224 மாணவர்களையும், இப்பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள மாணவர்களை வழிகாட்டிய அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபை,
பழைய மாணவர் சங்கம்.

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி,
சாவகச்சேரி.
18-02-2000 (சி/11060)


## யாழ் மேயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்துக்கு புதிய மேயர் ஒருவரை அக்கட்சி நியமிக்கத் தவறியதை அடுத்து, மாநகரசபைத் தேர்தலில் அக்கட்சியின் சார்பில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர்களின் ஒழுங்கின்படி புதிய மேயராக செல்லன் கந்தையனின் பெயரை தேர்தல் ஆணையாளர் இரு வாரங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

ஆனால் மேயர் பதவியை உடனடியாக ஏற்கக்கூடிய நிலையில் தாம் இல்லை என்று தெரிவித்து கந்தையன் மறுப்புக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

உரிய நேரத்தில் உரிய முறைப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி என்னை முதல்வராக நியமிக்கும் வேளையிலேயே மேயர் பதவியை ஏற்பேன் என்று அவர் அந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

தற்போது அக்கடிதத்தை வாபஸ் பெற்று மேயர் பதவியை ஏற்பதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

(உ-6)

## தென்மராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைச் சேர்ந்த மூன்று பேரும் கொடிகாமம் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் சிறுவன் ஒருவனும் காயமடைந்த நிலையில் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

சுப்பையா மணிராஜ் (வயது 44), இவரது மகனான மணிராஜ் விஜேந்திரன் (வயது 10), மாசிலாமணி சசிரேகா (வயது 20), ரவீரதன் ஜெனத் (வயது 06) ஆகியோரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

இதேவேளை இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் ஈ.பி.டி.பி. அமைப்பின் வாகனம் ஒன்றின் மூலம் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டனர் என அந்தக் கட்சி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

இதற்கிடையில் புளொட்டைச் சேர்ந்த சாவகச்சேரிப் பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்று காயமடைந்தவர்களைப் பார்வையிட்டு அவர்களின் நலன்களைக் கேட்டறிந்தார் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (இ-7)


## நாளை ஆரம்பம்

சிங்களம்

இலகுவாக எழுத, வாசிக்க, பேச

K.R. சூரி

1மணி (ப.நே.)

D.M.I.

(73780) யாழ்நகர்.



## விரிவுரைகள் ஆரம்பம்

கல்வியாண்டு 2000/2001 இன் முதலாவது பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பம்.

வாரஇறுதி நாள் வகுப்புக்களுக்கான விரிவுரைகள் 20.02.2000 (ஞாயிறு) அன்றும், வாரநாள் வகுப்புக்களுக்கான விரிவுரைகள் 21.02.2000 (திங்கள்) அன்றும் ஆரம்பமாகின்றன என்பதை அறியத்தருகின்றோம்.

* புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மேற்படிப் பிரிவுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

இயக்குநர்
I.I.S.

100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (C/11037)


## இந்துப் பேர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமயப் பேரவை ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் கோரி உள்ளது.

அன்றைய தினம் மக்கள் பூசைகளிலும் பிரார்த்தனைகளிலும் கலந்து கொள்ள வசதியாக ஊரடங்கைத் தளர்த்துமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

(இந்து சமயப் பேரவையின் அறிக்கை 10ஆம் பக்கத்தில்)

## விடுதலைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ள விடுதலைப் புலிகளுக்கு என்றும் நாம் நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

அதே சமயம் அனுமதி வழங்கப்பட்டாலும் வழங்கப்படாவிட்டாலும் நாம் அடுத்த வாரம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் செல்ல உள்ளோம் என்று காணாமல்போன படையினரின் பெற்றோர் சங்கத் தலைவர் வி.பி.நாணயக்கார கூறினார்.


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

### பழைய மாணவர் சங்கம்

### முழு நிலா நாள் கருத்தரங்கு

இடம்:- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்.
காலம்:- நாளை (19-02-2000) சனிக்கிழமை
தலைமை:- பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
கருத்துரை:- "சூழலும் மனித முன்னேற்றமும்"
வழங்குபவர்:- திரு.க.சி.குகதாசன் M.Sc.
(தலைவர், தொண்டமனாறு வெளிக்கள நிலையம்,
முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.)

அனைவரும் வருக!

பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

ஆதரவு:- வேணி களஞ்சியம்

165, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 2661, 2046 (C/11077)



# அஞ்சலி

கம்பர்மலையில்
பிறந்து வளர்ந்து அவ்வூர் மக்களுக்கு
தொண்டனாய் தலைவனாய் பணிசெய்து
தலைவர்
என நாமம் பூண்ட
**வடிவேல் தங்கராஜா** அவர்கள்
ஆத்மா சாந்தி அடைவதாக.

430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பாரதி பதிப்பகம்.
(C/11074)



## தரிசனம் இலங்கை - 2000

### இன்னிசை நற்செய்திக் கூட்டம்!

### சுகமளிக்கும் ஆராதனை!!

இன்னிசைக் குயில் ~ சகோதரி எஸ்தர் பேபி
(சின்னஞ்சிட்டுக் குருவியே ~ புகழ்)
சுவிசேஷ இடிமுழக்கம் ~ சங்கை ஜெயச்சந்திரன்
அன்பின் செய்தி ~ சங்கை டாஸன் சாய்சன்
மற்றும் பலர்

'வியாதியஸ்தலர்களுக்கான விசேட ஜெபங்கள்'

இடம் – சாவகச்சேரி மகளிர் கல்லூரி,
சாவகச்சேரி.

காலம் – இன்று (18-02-2000) வெள்ளிக்கிழமை
மாலை 3.00 மணி.

'யாவும் இலவசம்! யாவரும் வருக!!'

"வருத்தப்பட்டு பாரம் சுமக்கின்றவர்களே
நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்
நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."
"இயேசு கிறீஸ்து" - (மத்தேயு 11:28)

கானான் ஜெபஆலயம்
இருபாலை.

(C/11043)



# STP COMPUTER WORLD

சிறப்புப் புலமைப்பரிசில் திட்டம் - 2000

## புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.

புலமைப் பரிசில் பரீட்சைகளில் தகுதிபெற்ற
மாணவர்களுக்கான வகுப்புக்கள் (பிரிவு I - பிரிவு II)
ஆரம்பம் :- 19-02-2000 சனிக்கிழமை
10மணிக்கு (புதிய நேரம்)

மாணவர்கள் தமது பதிவுகளை முற்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

- இயக்குநர் -

T.P:- 021-2674
E-mail:- stpcom@sltnet.lk
Reg.No: NAL/SD/377

No.54A, Palaly Road,
Kantharmadam,
Jaffna. (C/11073)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-02-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.